# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 06 புதன்கிழமை (20-06-2001) UTHAYAN - A Lively National Tamil.Daily கதிர்:206


# புலிகளைப் பேச்சுக்கு அழைத்துவர பிரதான கட்சிகள் ஒன்றுபட வேண்டும்

## அரசியல் கலாசாரத்தை மாற்றக் கோருகிறார் பீரிஸ்

கொழும்பு,ஜூன்20

**நாட்டின் தேசியப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் விடயத்தில் முதலில் அரசியல் கட்சிகளுக்கு இடையில் உடன்பாடு எட்டப்படவேண்டும். அவ்வாறு ஏற்பட்டால் மட்டுமே விடுதலைப் புலிகளைப் பேச்சு மேசைக்குக் கொண்டு வர அழுத்தம் கொடுக்க முடியும்.**

**நாட்டில் புதிய அரசியல் கலாசாரம் ஒன்றை உருவாக்க கட்சி பேதங்கள் கைவிடப்பட வேண்டும்.**

**இவ்வாறு வலியுறுத்தியிருக்கிறார் அரசமைப்பு விவகார, கைத்தொழில் விஞ்ஞானத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்.**

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையில் அவர் இப்படிக் கூறினார். உள்நாட்டு இறைவரித் திருத்தச் சட்ட மூலம் ஒன்றைச் சமர்ப்பித்துப் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:-

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குப் பிரதான அரசியல் கட்சிகள் முரண்பாடுகளையும் பேதங்களையும் மறந்து இணைந்து செயற்பட வேண்டும். அப்போதுதான் புலிகளைப் பேச்சு மேசைக்குக் கொண்டு வர அழுத்தம் கொடுக்க முடியும்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## 17 ஆயிரத்து 211 புலிகள் இதுவரை களப்பலியாகினர்

### மாவீரர் பணிமனை நேற்று அறிவிப்பு

வவுனியா,ஜூன்20

1982 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி தொடக்கம் கடந்த மே மாதம் 31 ஆம் திகதிவரையான காலப் பகுதியில் தமது தரப்பில் 17 ஆயிரத்து 211 போராளிகள் களப்பலியாகியுள்ளதாக விடுதலைப் புலிகளின் மாவீரர் பணிமனை நேற்று அறிவித்துள்ளது.

உயிரிழந்தோரில் 78 தரைக் கரும்புலிகளும் 139 கடற் கரும்புலிகளும் உட்பட மொத்தம் 217 கரும்புலிகளும் அடங்குவர். அவர்களில் 160 பேர் ஆண்கள், 57 பேர் பெண்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போராளிகளை விட எல்லைப்படையைச் சேர்ந்த 266 ஆண்களும் 5 பெண்களும் களப்பலியாகியுள்ளனர். மாவட்ட ரீதியாகக் களப்பலியானவர்களின் எண்ணிக்கை வருமாறு:-

யாழ்ப்பாணம் - 6,337, அம்பாறை - மட்டக்களப்பு - 4,418, வன்னி - 2,462, திருகோணமலை - 1,436, முல்லைத்தீவு - 1,252, மன்னார் - 1,013, ஏனைய மாவட்டங்கள் - 293.

(ஐ-3)

## திருநெல்வேலிப் பகுதியில் வர்த்தகர் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம்,ஜூன்20

திருநெல்வேலி மேற்கு தலங்காவற் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் நேற்று முற்பகல் இனந்தெரியாத நபர்களால் அவரது கடையில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அப்பகுதியில் 'விநாயகர் ஸ்ரோர்ஸ்' என்னும் வர்த்தக நிலையத்தை நடத்தி வந்த - ஐந்து பிள்ளைகளின் தந்தையான - தம்பு சந்திரசேகரம் (வயது 52) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்று முற்பகல் பிஸ்டல் குழு உறுப்பினர்கள் எனச் சந்தேகிக்கப்படும் நபர்கள் அவரது கடைக்குச் சென்று அங்கு வைத்து அவரைச் சுட்டுக் கொன்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தலையிலும், மார்பிலும் குண்டு பாய்ந்த நிலையில் அவரது சடலம்

(14 ஆம் பக்கம் பார்க்க)


## தமது உயிருக்கு அச்சுறுத்தல் என்கிறார் 'தமிழ் நெற்' ஆசிரியர்

கொழும்பு,ஜூன்20

'தமிழ் நெற்' எனப்படும் பிரபல இணையச் செய்தித் தளத்தின் ஆசிரியரான தர்மரட்ணம் சிவராம் (தராகி) தனதும் தனது குடும்பத்தினரதும் உயிர்களுக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகளின் உளவாளிகள் பட்டியலில் தர்மரட்ணம் சிவராமும் ஒருவர் என்று அரச சார்புப் பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட செய்திகளையும் புகைப்படத்தையும் அடுத்தே தமது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக அவர் தெரி

(14 ஆம் பக்கம் பார்க்க)



யாழ்ப்பாணம் வந்துள்ள சர்வமதக் குழுவினர் நேற்று நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு விஜயம் செய்தபோது எடுக்கப்பட்ட படம். சர்வமதக்குழுவில் அங்கம் வகிக்கும் மதத்தலைவர்கள் அனைவரும் ஆலயத்தின் முன் மண்டபத்தில் ஒன்றாகக் காணப்படுகின்றனர். (ஐ)

### நாடாளுமன்றத்தில் ரணில் கேள்வி:

## முக்கிய முடிவுகளை மூடிமறைக்கும் அரசுடன் இணங்கிப் போவது எப்படி?

கொழும்பு,ஜூன்20

நாட்டின் முக்கிய விடயங்களை மூடி மறைக்கும் அரசுடன் எவ்வாறு இணைந்து செயற்பட முடியும்?

இப்படிக் கேள்வி எழுப்பியுள்ளார் ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இப்படி கேள்வி எழுப்பினார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

புதிய அரசியல் கலாசாரம் உருவாக வேண்டுமென்று அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கூறுகின்றார். அரசியல் கலாசாரம் நாடாளுமன்றத்தில் உருவாக வேண்டும்.

இவ் விடயத்தில் நம்பிக்கை வளர வேண்டுமாயின் அரசு முதலில் தனது முடிவுகளை நாடாளுமன்றத்துக்கு அறிவிக்க வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பாடு கண்டு மூன்று மாதங்களுக்குப் பின்னரே அது தொடர்பாக நாடாளுமன்றத்துக்கு அறிவிக்கும் நிலையில் அரசு உள்ளது.

முடிவுகளை மூடிவைக்கும் அரசுடன் நாம் எப்படி இணைந்து செயற்பட முடியும் - என்றார் அவர்.

(ஐ-3)

## பிரிட்டிஷ் தூதுவர் இன்று வருகிறார்

யாழ்ப்பாணம்,ஜூன்20

இலங்கையில் உள்ள பிரிட்டிஷ் தூதுவர் லிண்டா டபீல்ட் இன்று யாழ்ப்பாணம் வருகிறார்.

இரண்டு நாள்கள் மட்டுமே இங்கு தங்கிநிற்கும் அவர் நாளை வியாழக்கிழமை காலையில் புனித பத்திரிசியார் கல்லூரிக்கு விஜயம் செய்வார். அதன் பின்னர் யாழ்.செயலகத்தில் பதில் அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் மற்றும் அரச உயர் அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடுவார்.

யாழ்ப்பாணம் நூல்நிலையத்துக்கு ஒரு தொகுதி நூல்களைக் கையளிப்பதற்காக அங்கு செல்வார்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு வான்பரப்பில் பறந்த மர்ம விமானம்!

கொழும்பு,ஜூன்20

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலைய 'ராடர்' திரையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இனந்தெரியாத மர்ம விமானம் ஒன்று தென்பட்டுள்ளதாக பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை வான்பரப்பில் முன்னறிவித்தலின்றிப் பறந்த அந்த விமானம் பற்றி உடனடித் தகவல் பெற அதிகாரிகள்•முயற்சி மேற்கொண்டனர். தமது தொடர்பாடற் கருவிகள் மூலம் அந்த விமானத்தின் விமானியுடன் தொடர்புகொள்ள முயற்சித்த போதும் மறுமுனையில் இருந்து பதில் ஏதும் கிடைக்கவில்லை எனறு தெரிவிக்கப்படுகிறது.

உடனடியாக விமானப் படையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. விமானப் படையினரின் ஜெற் விமானங்களும் தாக்குதல் ஹெலிக்கொப்டர்களும் மர்ம விமானம் தென்பட்ட, விமான நிலையத்தின் வடக்கு

(14 ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் தொகையைப் பெருக்க அதிக குழந்தைகளைப் பெறுங்கள்!

### நாட்டு மக்களிடம் பிரதமர் வேண்டுகோள்

கொழும்பு,ஜூன்20

இராணுவத்தினரதும், பௌத்த குருமார்களினதும் எண்ணிக்கையை அதிகரிக்கும் பொருட்டு அதிக குழந்தைகளைப் பெற்றெடுக்குமாறு பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க மக்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

எழுபதுகளில் தொடங்கிய குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைக் கைவிட்டு அதிக பிள்ளைகளைப் பெறுவதற்கு ஊக்குவிக்க வேண்டிய காலம் வந்துவிட்டது என்று மாவனல்லவில் பௌத்த மத நிகழ்வில் உரையாற்றுகையில் பிரதமர் சொன்னார்.

பிறப்பு விகிதம் தொடர்ந்து குறைந்து கொண்டு போகுமேயாகின் இராணுவத்துக்குப் போதிய ஆள்களைத் திரட்ட முடியாமற் போகும். அதன் விளைவு தனிநாட்டுக்காகப் போராடும் விடுதலைப் புலிகளை எதிர்த்துப் போராட முடியாத இக்கட்டான நிலை தோன்றும் -

அதிக பிள்ளைகளைப் பெற்றெடுப்பதில் மக்கள் அக்கறை காட்ட வேண்டும். 'சிறியதே அழகானது' என்ற குடும்பக் கட்டுப்பாட்டுக் கோட்பாட்டைக் கைவிட்டு 'பெரியதே நல்லது' என்று மக்கள் சிந்திக்கத் தொடங்க

(14 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



இனவிவகார தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் ஏற்பாட்டில் நேற்று யாழ்.செயலகத்தில் நடைபெற்ற மக்கள் அபிமான சமாதானக் குழுவின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட படங்கள்.

இந்து மத குரு பீடாதிபதி ச.மகேஸ்வரக் குருக்கள், நாகவிகாரை பௌத்த குரு ஞானானந்தா தேரோ ஆகியோர் உரையாற்றுவதையும் யாழ்.மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் மற்றும் தென்னிலங்கை சர்வமதக்குழு பிரதிநிதிகள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். *(படங்கள்: றோய் மதிவதனன்)*

# எங்கள் தேசம் எரிந்து கொண்டிருக்கிறது; அதைத் தடுப்பதே நமது பணியின் நோக்கம்

## சர்வமதக் குழுத் தலைவர் செயலகக் கூட்டத்தில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்20

இன்று எமது நாடு எரியும் தேசமாகவே இருக்கிறது. இந் நிலையிலிருந்து நாட்டை மீட்டு சமாதானத்தை நிலைநாட்டுவதே எமது யாழ்ப்பாண பயணத்தின் நோக்கமாகும்.

இவ்வாறு கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள சர்வமதக்குழுவின் தலைவரான வண.வடினாபாகே சோமானந்ததேரர் தெரிவித்தார்.

நேற்றுக் காலை 10 மணிக்கு யாழ். செயலகக் கேட்போர் கூடத்தில நடைபெற்ற மக்கள் அபிமான சமாதானக் குழுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் சமயத் தலைவர்கள் மற்றும் அரச திணைக்கள அதிகாரிகள், பிரதேசத் சபைத் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

அவர் அங்கு உரையாற்றும் போது மேலும் கூறியதாவது:-

இந்த நாட்டில் நிலவும் இனப் பிரச்சினையை தீர்ப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா தனி அமைச்சினை உருவாக்கி அதனூடாக இப்பிரச்சினையை தீர்ப்பதற்கு விரிவான திட்டங்களை மேற்கொண்டு வருகிறார்.

இதுவரை காலமும் இப்பிரச்சினையால் ஏற்பட்ட அழிவுகளை அறிந்து எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் ஏற்படாமல் பாதுகாக்க வேண்டிய வழிவகைகளை நடைமுறைப்படுத்துவதே புதிதாக உருவாக்கப்பட்ட இந்த அமைச்சின் பணியாகும்.

யுத்தம் காரணமாக இந்த நாட்டில் உள்ள மக்களுடைய வாழ்க்கை நிலை குழப்பம் அடைந்துள்ளது. இதனைப் பற்றி நாம் ஆராய்ந்து தீர்ப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதே சர்வமதக் குழுவின் நோக்கம் ஆகும்.

**யாழ்நகரின் இன்றைய நிலை**

இருபது வருடங்களுக்கு முன் நாம பார்த்த யாழ்ப்பாணத்தையும் இன்றைய யாழ்ப்பாணத்தையும் அவதானிக்கின்ற போது பல வேறுபாடுகள் இருக்கின்றன. இன்றைய யாழ்.நகரைப் பார்த்து நாம் வேதனை அடைகின்றோம். மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைகள் என்ன? அவர்களுடைய தேவைகள் எவை என்பது பற்றி ஆராய்ந்து அவற்றைத் தீர்ப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

கலந்துரையாடல்கள் மூலம் நாட்டிலே சுபீட்சத்தினை ஏற்படுத்த முடியும். இதற்கான செயற்பாடுகளில் சமயப் பெரியார்கள் தொடர்ந்து ஈடுபடவேண்டும் - என்றும் கூறினார்.

சர்வமதக் குழுவில் அங்கம் வகிக்கும் மௌலவி எஸ்.சுபியான் இந்தக் கூட்டத்தில் உரையாற்றும் போது கூறியதாவது:-

இந்த நாட்டிலே பல்லின மக்கள் வாழக்கூடிய சூழ்நிலையிலே இவ்வாறான துரதிர்ஷ்டமான யுத்தம் ஏற்பட்டிருப்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

பௌத்த மதமும் கிறிஸ்தவ மதமும் கூட சாந்தி சமாதானம் பற்றி வலியுறுத்திக் கொண்டு இருக்கின்றன. ஆனால் மதத்தை பின்பற்றிக் கொண்டிருக்கின்ற மக்கள் மத்தியிலே இன உறவுகளை கட்டியெழுப்ப முடியாத ஒரு சூழலில் இருக்கின்றோம். இது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

இந்த நாட்டிலே ஏற்பட்டிருக்கின்ற இன முரண்பாட்டினை தீர்ப்பதில் அரசியல் வாதிகள் தோல்வியடைந்து விட்டார்கள்.

இன முரண்பாட்டை தீர்ப்பதற்கு மதத்தலைவர்கள் முன்வந்திருக்கிறார்கள். ஒவ்வொரு மதத் தலைவர்களுக்கும் சமுதாயத்தின் அடிமட்டம் வரை தொடர்பு இருக்கிறது.

இந்த சமாதானத்தின் செய்தியை ஒவ்வொரு சமூக உறுப்பினரின் உள்ளங்களிலும் கொண்டு செல்லக் கூடிய மகா உயர்ந்த பணியைத்தான் சர்வமதக் குழு ஆற்றி வருகின்றது - என்று கூறினார்.

பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரம முதல்வர் சுவாமி சித்ரூபானந்தா அங்கு உரையாற்றும்போது கூறியதாவது:-

தமிழர்கள் போதுமென்ற அளவுக்கு கஷ்டப்பட்டு விட்டார்கள். எனவே இனியும் தாமதியாது சந்திரிகாவும் பிரபாகரனும் உடனடியாகச் சமாதானப் பேச்சில் ஈடுபட வேண்டும்.

பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் பர்வேஷ் முஷாரப்பும் இந்தியப் பிரதமர் வாஜ்பாயும் பேச முடியும் என்றால் ஏன் சந்திரிகாவும் பிரபாகரனும் .பேச முடியாது?

காலங்கடந்து கொண்டிருக்கிறது. மக்களுடைய கஷ்டங்களும் துன்பங்களும் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. எனவே இனியும் தாமதிக்கக்கூடாது. தாமதித்தால் எங்களுடைய எதிர்காலம் பாதிக்கப்படும்.

அரசியல்வாதிகள் எப்போதும் உதவாதவற்றையே பேசி வருகிறார்கள். எனவே சர்வமதக்குழு இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆரோக்கியமாகச் செயற்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

தென்னிந்தியத் திருச்சபை யாழ். ஆதீனத்தின் பேராயர் வணபிதா எஸ்.ஜெபநேசன் அங்கு உரையாற்றும்போது கூறியதாவது:-

இலங்கையில் இருக்கும் மிக அழகான நகரம் யாழ்ப்பாணம். ஆனால் யுத்தத்தினால் இது இன்று அழிக்கப்பட்டுவிட்டது.

பௌத்த துறவிகள் அடிக்கடி யாழ்ப்பாணத்துக்கு வருகைதர வேண்டும் என்று விரும்புகிறேன்.

இந்த நாட்டிலே சிறந்த மக்கள் பௌத்த மதத்தில் இருக்கிறார்கள். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணக் கூடிய சக்தியும், திறமையும், செல்வாக்கும் பௌத்த பிக்குகளுக்கே உண்டு.

சிறுபான்மையினரான எங்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.

மிக செல்வாக்குள்ள பௌத்த பிக்குகள் வந்துள்ளீர்கள். நீங்கள் நினைத்தால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிடமுடியும் - என்று அவர் கூறினார்.

பிரம்மஸ்ரீ மோகன் சர்மா உரையாற்றும்போது கூறியதாவது:-

பௌத்த பிக்குகள் எல்லோரும் துவேசம் கொண்டவர்கள் என்று யாரும் தவறாக எடைபோட வேண்டாம்.

இந்த நாட்டில் சமாதானம் வர வேண்டும் என்று அயராது பாடுபடுபவர்கள் பௌத்த பிக்குகளே. அவர்கள் அனைவரும் ஒன்றாகக் கூடினார்களேயானால் நாளைய சமாதானத்தை உருவாக்கக் கூடிய வல்லமை அவர்களிடம் உண்டு - என்று கூறினார்.

சர்வமதக்குழு பிரதிநிதி வண. பிதா அன்ரனி சிறில் உரையாற்றும் போது கூறியதாவது:-

சமாதானம் சாத்தியப்படக்கூடிய ஒன்றாகும். சமாதானமே எங்கள் முன்னுள்ள பொறுப்பாகும். எனவே எல்லோரும் சமாதானத்துக்குப் பொறுப்பு வாய்ந்தவர்களாகச் செயற்படுமாறு அழைப்பு விடுக்கின்றோம்.

சாதாரண பிரஜைகளை சமாதானத்தில் ஈடுபடுத்தும் நோக்குடன் மக்கள் அபிமான சமாதானக்குழு என்ற அமைப்பை ஆரம்பிக்க இருக்கின்றோம் - என்றார்.

**மேலதிக அரசாங்க அதிபர்**

இந்த நிகழ்வுக்கு தலைமை வகித்த யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் உரையாற்றும் போது கூறியதாவது:-

இரண்டு தசாப்தத்துக்கு மேலாக இந்த நாட்டிலே அர்த்தமற்ற யுத்தம் நடந்துகொண்டிருக்கிறது.

யுத்தத்தினால் கண்ணீர் சிந்தும் விதவைகள் மற்றும் அநாதைக் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே செல்கிறது.

மக்கள் களைத்துப் போய்விட்டார்கள். காலம் விரைகிறது. பெறுமதிமிக்க உயிர்கள் இரண்டு பக்கத்திலும் அழிகின்றன. இது ஏன்? இதனை நிறுத்த முடியாதா? - என்றார்.

யாழ்.நாக விகாரையின் பிரதம குரு ஞானானந்த தேரோ அங்கு உரையாற்றும்போது -

வடக்குப் பிரதேசத்துக்கு இன்று சமாதானம் அவசியம் தேவைப்படுகிறது. அமைதிக்காக 24 மணித்தியாலமும் எமது விகாரை செயற்பட்டு வருகிறது.

வடக்கும் தெற்கும் இணைந்து இந்த நாட்டிலே சுபீட்சத்தை ஏற்படுத்த வேண்டும் - என்று கேட்டுக் கொண்டார்.

யாழ்.ஆயர் இல்ல குருமுதல்வர் வண பிதா ஜே.பி.ஈ. செல்வராசா, அருட்கவி விநாசித்தம்பி உட்படப் பலர் உரையாற்றினார்கள்.

இறுதியில் சியம்பல விமலசார தேரோ தமிழில் நன்றியுரை வழங்கினார். (ஐ-5-6)

## ஆசிரியர் செயலமர்வு

தென்மராட்சி,ஜூன்20

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை ஆசிரியர்களுக்கான கல்விச் செயலமர்வுகள் நாளை வியாழக்கிழமை தொடக்கம் ஜூலை மாதம் எட்டாம் திகதி வரை வலய ஆசிரிய மத்திய நிலையத்தில் நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான கணித உபகரணம் தயாரித்தலும் பயன்படுத்தலும் செயலமர்வுகள் நாளையும் பிள்ளை மையக் கல்வி செயலமர்வு நாளை மறுதினமும நடைபெறவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ-117)

## கூட்டுறவாளர் கௌரவிப்பு

பருத்தித்துறை,ஜூன்20

புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் இருபத்தைந்து வருட கூட்டுறவுப் பணியில் சேவையாற்றிய பதினான்கு பணியாளர்களைக் கௌரவிக்கும் விழா இன்று புதன்கிழமை காலை 10.00 மணியளவில் சங்கத் தலைவர் இ.அருமைததுரை தலைமையில் நடைபெறவுள்ளது. அத்துடன் கிளை முகாமையாளர்களிடையே நடத்தப்பட்ட போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. கடந்த ஒரு வருட காலத்தினுள் ஓய்வு பெற்ற கூட்டுறவு ஊழியர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர். இந் நிகழ்வில் யாழ்.மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் செ.கு.சண்முகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கூட்டுறவாளர்களை கௌரவிக்கவுள்ளார். (ஐ-118)

## மது ஒழிப்பு கண்காணிப்புக் குழுக்கள் அமைப்பு

வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் பகுதியில் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக மது ஒழிப்புக் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன. கசிப்பு மற்றும் மதுபானம் என்பன அருந்துவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. எனவே இவற்றால் ஏற்படும் தீங்குகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக இந்த மது ஒழிப்பு கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளதாக பிரதேச செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார். (ம-135)

**மீண்டும் பழைய இடத்தில்**

## மீசாலை வீரசிங்கம் ம.வி. 25ஆம் திகதி முதல் இயங்கும்

### படைத் தரப்பில் அறிவிப்பு

மீசாலைப் பகுதியில் மீளக் குடியமர்ந்துள்ள மாணவர்களின் நன்மை கருதி இம்மாதம் 25ஆம் திகதி திங்கட்கிழமை முதல் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தை மீண்டும் இயங்க வைக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக யாழ்பாதுகாப்புப் படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

ஆரம்பத்தில் முதலாம் தரம் முதல எட்டாம் தர மாணவர்களுக்கான கல்விப் போதனைகள் இங்கு இடம் பெறும் என பலாலி படைத் தலைமையகம் நேற்று விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம், அல்லாரை அ.த.க. வித்தியாலயம், மீசாலை விக்னேஸ்வர மகா வித்தியாலயம், சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை ஆகியவற்றில் முன்னர் கல்வி கற்று தற்போது மேற்படி பாடசாலைகளில் கல்வியைத தொடர முடியாதுள்ள மாணவர்களும் வீரசிங்கம் மகா வித்தியாலயத்துக்குச் சமுகமளித்து கல்வியைத் தொடரலாம்.

வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களின் நன்மை கருதி கொடிகாமத்துக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தினமும் காலை 7மணிக்கு விஷேட பஸ் சேவை ஒன்றை ஆரம்பிப்பதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

மேற்படி பாடசாலைக்கு சமுகமளிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து அங்குள்ள ஏனைய பாடசாலைகளையும் மீண்டும் இயங்க ஒழுங்குகள் செய்யப்படும்.

- இவ்வாறு அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)


**வாழ்த்தி வணங்குகின்றோம்**

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய ஆதீனகுரு

**சிவஸ்ரீ ச.மகேஸ்வரக் குருக்கள் அவர்கள்**

சர்வதேச இந்து மத குரு பீடாதிபதியாகத் தெரிவாகியதை இட்டு அவரை மனதார வாழ்த்தி வணங்குகின்றோம்.

தெற்பத்திருவிழா உபயகாரர்,
நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோயில்.

(89225)

**வணங்கி வாழ்த்துகின்றோம்**

கிரியா கலாப முத்தாமணி

**சிவஸ்ரீ ச.மகேஸ்வரக் குருக்கள்**

(பிரதம குரு, சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்)



எங்கள் குருக்கள் ஐயா அவர்கள்," சர்வதேச இந்துமத குருபீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைந்து அவரை மனதாரப் பாராட்டி வணங்கி வாழ்த்துகின்றோம். இவர்தம் குடும்பத்துடன் சகல ஐஸ்வரியங்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழவேண்டுமென எல்லாம்வல்ல அருள்மிகு சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

**யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம், மானிப்பாய்.**

(89220)

# புதுடில்லி 'குரங்கு மனிதன்' கதை அச்ச உணர்வின் வெளிப்பாடே

## உளவியல் நிபுணர்கள் தெரிவிப்பு

புதுடில்லி,ஜூன்20

இந்தியத் தலைநகர் புதுடில்லியில் அச்சத்தை ஏற்படுத்தி வந்த 'குரங்கு மனிதன்' என்ற வதந்தி, மனோதிடம் குறைந்தவர்களின் உணர்வு வெளிப்பாடே என்று விசாரணைகள் நிரூபித்துள்ளன.

'குரங்கு மனிதன்' பற்றிய உளவியல் நிபுணர்களும், சட்ட மருத்துவ அதிகாரிகளும் விசாரணை நடத்தினார்கள்.

குரங்கு மனிதனை நேரில் பார்த்ததாகக் கூறியவர்களும் -

அதனால் தாக்கப்பட்டதாகக் கூறியவர்களும் -

விசாரணைக்குட்படுத்தப்பட்டார்கள்.

இந்த விசாரணைகளின் முடிவில் குரங்கு மனிதன் பற்றிய செய்தி வெறும் கற்பனையே என்று விசாரணையாளர்கள் தெரிவித்தனர்.

குரங்கு மனிதனால் தாக்கி மரணமடைந்ததாகச் சொல்லப்படும் மூவரும் பயத்தின் காரணமாகவே உயிரிழந்ததாகவும் அவர்கள் கூறியுள்ளனர். (ஒ)

## பாகிஸ்தான் அமைச்சர் கோரிக்கை

வாஷிங்ரன்,ஜூன்20

இந்தியாவுக்குச் சமமாகப் பாகிஸ்தானையும் அமெரிக்கா கருதவேண்டும் என்று பாகிஸ்தானிய வெளிவிவகார அமைச்சர் அப்துல் சதார் வேண்டுகோள் விடுத்தார்.

அமெரிக்கா சென்றுள்ள அவர், வாஷிங்ரனில் இடம்பெற்ற விழா ஒன்றில் உரையாற்றும் போதே இவ்வாறு கோரினார். (ஒ)



'உடலில் மிக அதிக அளவில் பச்சை குத்தியுள்ள வயதான நபர்' என்ற பெருமையை பிரிட்டனைச் சேர்ந்த இஸபெல் வரெலி என்ற 64 வயதுப் பெண்மணி பெற்றுள்ளார்.

கடந்த 15,17ஆம் திகதிகளில் மட்ரிட்டில் நடைபெற்ற பச்சை குத்தியுள்ளவர்களின் சர்வதேச மாநாட்டில் கலந்துகொண்ட இஸபெல்லா, தனது உடலில் குத்தப்பட்டுள்ள பச்சைகளை பெருமை பொங்கக் காண்பிப்பதைப் படத்தில் காணலாம்.

# நாய்கள் பாலூட்டி வளர்த்த சேய் சிலி நாட்டுக் குகையிலிருந்து மீட்பு

சண்டியாகோ,ஜூன்20

கைக்குழந்தையாக இருந்தபோது கைவிடப்பட்ட சிறுவனைத் தெரு நாய்கள் பாலூட்டி, பல வருட காலம் வளர்த்த சம்பவம் தென்அமெரிக்க நாடான சிலியில் இடம்பெற்றுள்ளது.

இந்த ஆச்சரியமான சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

சிலியின் கடற்கரையோர மலைப் பகுதியில் நாய்களுடன் சிறிய மனித உருவம் ஒன்று உலாவுவதாகக் கடந்த சில ஆண்டுகளாகக் கூறப்பட்டு வந்தது.

ஆனால் இதனை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை. இந்த நிலையில்,

சில நாள்களுக்கு முன்னர் நாய்களுடன் குகை ஒன்றுக்குள் இருந்த சிறுவனை பொலீஸார் கண்டு பிடித்து மீட்டனர். பொலீஸாரைக் கண்டவுடன் அந்தச் சிறுவன் கடலினுள் பாயநததாகவும் -

அதே சமயம் நாய்கள் பொலீஸாரைக் கடித்துக் குதற முற்பட்டதாகவும் -

நாய்களை விரட்டி விட்டு, கடலில் பாய்ந்த பொலீஸார் சிறுவனை மீட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

மீட்கப்பட்ட சிறுவனை பரிசோதனைகளுக்குட்படுத்திய போது அந்தச் சிறுவனுக்கு நாய்கள் பாலூட்டி வளர்த்திருப்பதும் -

பேச முடியாத நிலையில், நாய்களைப் போல் விரைவாக மலைப் பாறைகளில் தாவி ஏறும் சக்தி சிறுவனுக்கு இருப்பதும் - தெரியவந்தன.

தற்போது அரசாங்க நலன்புரி நிலையத்தில் பெயரிடப்படாத இந்தச் சிறுவன் பேணப்படுகிறான். (ஒ-4)

# மணிப்பூர் மாநில சட்ட சபைக்கு பொது மக்கள் கூட்டம் தீ வைப்பு!

## பொலீஸ் சுட்டதில் 13 பேர் பலி ஊரடங்கு உத்தரவு அமுல்

இம்பாலா,ஜூன்20

**இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான மணிப்பூரில் நேற்று முன்தினம் சட்ட சபைக் கட்டடம் தீவைத்துக் கொளுத்தப்பட்டது.**

**மத்திய, மாநில அரசுகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களே தீ வைப்பில் ஈடுபட்டனர். அவர்களைக் கலைக்கப் பொலீஸார் சுட்டதில் 13 பேர் இறந்தனர்.**

இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான நாகலாந்துடன் அதனைச் சுற்றியுள்ள நாகா இனத்தவர் அதிகம் வாழும் பகுதிகளை இணைத்து அகண்ட நாகலாந்தை உருவாக்க, நாகலாந்து தேசிய சோஷலிஸக் குழு போராடி வருகிறது.

இந்தக் குழு மத்திய அரசுடன் நடத்திய பேச்சை அடுத்து நாகலாந்தில் யுத்த நிறுத்தம் அமுல்படுத்தப்பட்டது.

இந்த நிலையில் கடந்தவாரம் மணிப்பூர் மாநிலத்தில் நாகா இனத்தவர் அதிகம் வாழும் பகுதிகளுக்கும் யுத்த நிறுத்தத்தை மத்திய அரசு விஸ்தரித்தது.

மணிப்பூர் மாநிலத்தைப் பிரித்து நாகலாந்துடன் சேர்க்கும் நடவடிக்கையே இது என்று தெரிவித்த மணிப்பூர் மாணவர் பேரவை உட்பட சுமார் 80 மாநில அமைப்புகள், இதனைக் காண்பித்து 66 மணி நேர வேலை நிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்திருந்தன.

வேலை நிறுத்தத்தின் இறுதி நாளான நேற்று முன்தினம் ஆயிரக் கணக்கானவர்கள் ஒன்று சேர்ந்து மணிப்பூர் சட்டசபைக் கூட்டம் நடைபெற்றபோது, உள்ளே நுழைந்து அங்கிருந்தவர்களை தாக்கி, சட்ட சபைக் கட்டடத்துக்கு தீ வைத்தனர்.

இந்தச் சம்பவத்தில் சபாநாயகர் தனஞ்ஜெய்சிங் உட்பட 4 பேர் படுகாயமடைந்தனர்.


அப்போது வன்முறைக் கும்பலை கலைக்கப் பொலீஸார் சுட்டதில் 13 பேர் உயிரிழந்தனர்.

இதற்கிடையில், ஆளுநர் மாளிகை, முதல்வர் இல்லம் ஆகியவற்றுக்குள்ளும் மக்கள் கூட்டம் நுழைய முயன்றதாகவும் -

பொலீஸார் அதனை தடுத்து விட்டதாகவும் -

மாநில அரசு தெரிவித்தது.

இந்தச் சம்பவங்களை அடுத்து மாநிலத்தில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. (ஒ)



**சுவீடனின் கொதன்பேர்க் நகரில் கடந்த 15 ஆம் திகதி ஐரோப்பிய ஒன்றியத்தின் மாநாடு இடம்பெற்றது. அப்போது, மாநாடு நடைபெற்ற கட்டடத்துக்கு வெளியே உலகமயமாக்கலை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களுக்கும், பொலீஸாருக்கும் இடையே மோதல்கள் வெடித்தன. அந்தச் சமயத்தில் ஆர்ப்பாட்டக்காரர்களில் ஒருவரை சுவீடன் பொலீஸார் கைது செய்வதைப் படத்தில் காணலாம்.**

**இங்கு கைதுக்குப் பின்னர் நடப்பது, அங்கு கைதுக்கு முன்னர் நடக்கும் போலுள்ளது என்கிறார் சிறையிலிருந்து விடுதலையான இளைஞர் ஒருவர்.**

## தீயணைப்பு வீரர்கள் தீக்குப் பலி!

நியூயோர்க்,ஜூன்20

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் இடம்பெற்ற வெடி விபத்து ஒன்றில் 3 தீயணைப்பு வீரர்கள் கொல்லப்பட்டனர். நேற்றுமுன்தினம் பிற்பகல் இரும்புக் கடை ஒன்றில் ஏற்பட்ட தீ, எரிவாயு சேமிப்புக் கிடங்கில் பரவி வெடித்ததில் 3 தீயணைப்பு வீரர்களும் இறந்ததாகப் பொலீஸார் தெரிவித்தனர். (ஒ-4)

# ஜெயலலிதா மீதான வழக்குகளை சி.பி.ஐக்கு மாற்றக் கோரி மனு

## சென்னை நீதிமன்றத்தில் தாக்கல்

சென்னை,ஜூன்20

தமிழக முதல்வர் ஜெயலலிதா மீதான ஊழல் வழக்குகள் மத்திய புலனாய்வுத்துறையான சி.பி.ஐயால் கையாளப்பட வேண்டும் என்று கோரும் பொதுநல மனு ஒன்று நேற்று முன்தினம் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தி.மு.கவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் குப்புசாமி சார்பில் இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டது.

விதிகளை மீறி பிரிட்டனில் இரண்டு ஹோட்டல்களை வாங்கியது, அரசுக்குச் சொந்தமான 'கிரனைட்' கற்களை விற்றதில் இடம்பெற்ற ஊழல், சென்னையில் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்ற போது இடம்பெற்ற பணக் கையாடல்கள் ஆகியன தொடர்பாக ஜெயலலிதா மீது தொடரப்பட்டுள்ள வழக்குகளை மத்திய புலனாய்வுத் துறையிடம் கையளிக்க தமிழக அரசுக்கு உத்தரவிடும்படி மனுவில் கோரப்பட்டுள்ளது.

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, பொலீஸ் துறையைக் கட்டுப்படுத்தும் உள்துறை ஆகியவற்றை முதல்வர் ஜெயலலிதா தனது கட்டுப்பாட்டிலேயே வைத்திருப்பதாகவும் -

தனக்கெதிரான வழக்கு விசாரணைகளில், அரசு தரப்பு வாதங்களை வலிமையற்றவையாக்கவே, இந்தத் துறைகளை ஜெயலலிதா தன்வசம் வைத்திருப்பதாகவும் -

இதனால் நீதியான விசாரணைகள் நடைபெற வாய்ப்பில்லை என்றும் -

மனுவில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ஒ)

# பிரான்ஸ் 'எல்வ்' நிறுவன ஊழலில் அமைச்சர்களுக்குத் தொடர்பாம்

## ஆளுங்கட்சிக்குத் தர்மசங்கடம்

பாரீஸ்,ஜூன்20

பிரான்ஸில் முன்னய அரசின் ஆட்சிக் காலத்தில் அரசு நிறுவனமாக இருந்த 'எல்வ்' எண்ணெய் நிறுவன ஊழலில், தற்போதைய இரு அமைச்சர்களுக்கும் பங்கிருப்பதாகக் கூறப்படுவதையடுத்து, பிரான்ஸ் அரசியலில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

'எல்வ்' நிறுவனத்தில் இடம்பெற்ற பல இலட்சம் டொலர்கள் ஊழல் விவகாரத்தில், மூன்று வாரங்களுக்கு முன்னர் 6 மாதச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் பிரெஞ்ச் வெளிநாட்டமைச்சர் புளூரண்ட டூமா தண்டனை வழங்கப்பட்ட பின்னர், முதற தடவையாக நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசினார்.

இப்போதைய பிரெஞ்ச் அமைச்சர்கள் இருவருக்கு 'எல்வ்' நிறுவனம் சட்ட விரோதமாக வழங்கிய நன் கொடைகளில் சம்பந்தமிருப்பதாகத் தெரிவித்தார்.

தற்போதைய வெளிநாட்டமைச்சர் றொபேட் பேடின், வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் எல்ஸரத்குயோ ஆகியோரே 'எல்வ்' ஊழலில் சம்பந்தப்பட்டிருப்பதாக டூமா கூறியுள்ளார்.

இதனையடுத்து பிரெஞ்ச் ஆளுங்கட்சி தர்மசங்கடமான சிக்கல்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளது. (ஒ-4)

# லெபனானில் நிலைகொண்டிருந்த சிரியப் படைகள் முற்றாக வாபஸ்

பெய்ரூட்,ஜூன்20

லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் இருந்து சிரிய இராணுவம் முற்றாக வெளியேறி விட்டதாக சிரிய அரசு அறிவித்துள்ளது.

லெபனானில் 1976இல் உள்நாட்டு யுத்தம் ஆரம்பித்ததையடுத்து, சிரியா தனது படைகளை லெபனானில் நிலை நிறுத்தியிருந்தது.

ஏறத்தாழ 30 ஆயிரம் சிரிய இராணுவத்தினர் லெபனானில் கண்காணிப்புப் பணிகளுக்காக நிலை கொண்டிருந்தனர்.

1990இல் லெபனானில் உள்நாட்டு மோதல்கள் முடிவுக்கு வந்ததையடுத்து சிரியாவின் மத்தியஸ்தப் பணி முடிவுக்கு வந்தது.

எனினும் சிரியப் படைகள் தொடர்ந்து லெபனானில் நிலை கொண்டிருந்தன.

இந்த நிலையில், கடந்த வியாழக்கிழமை சிரியா தனது படைகளை திருப்பி அழைக்க ஆரம்பித்தது. நேற்றுடன் சிரியப் படைகள் லெபனானிலிருந்து முற்றாக விலக்கப்பட்டுவிட்டதாக சிரியா தெரிவித்துள்ளது. (ஒ-4)

# சதாமை எதிர்ப்பவர்களுக்கு அமெரிக்க அரசு நிதியுதவி!

வாஷின்ரன்,ஜூன்20

ஈராக் அதிபர் சதாம் ஹூசைனுக்கு எதிராகச் செயற்பட்டுவரும் அமைப்புகளுக்கு அமெரிக்க அரசு 60 இலட்சம் டொலர்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

அதிபர் சதாமுக்கு எதிராகச் செயற்படும் குர்திஷ் மற்றும் சன்னி இன இஸ்லாமிய அமைப்புகளுக்கே இந்த நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

சதாமுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்பவர்களுக்கு வழங்கவென அமெரிக்காவின் இந்த ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தில் ஒரு கோடியே 80 இலட்சம் டொலர்கள் ஒதுக்கப்பட்டிருந்தன.

அதிலிருந்து முதற்கட்டமாக 43 இலட்சம் டொலர்கள் சதாமுக்கு எதிரான அமைப்புகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருந்தன.

இரண்டாம் கட்டமாக, 60 இலட்சம் டொலர்கள் தற்போது வழங்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் நிதி உதவியைப் பெற்றுக் கொள்ளும் அமைப்புகள், ஊடகங்கள் ஊடாகவும் பொதுமக்களை நேரடியாகச் சந்தித்தும் சதாமிற்கு எதிராகப் பிரசாரம் செய்வதுடன் ஈராக் அரசின் நடவடிக்கைகள் பற்றி அமெரிக்காவுக்குத் தகவல்களைத் தெரிவிக்கும் உளவாளிகளாகவும் செயற்படுவது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூன் 20

உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 18 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 4 ஆம் திகதி புதன்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெற உள்ளன. (ம)

★ ★ ★

சுதுமலை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாள்கள் இடம்பெறும். எதிர்வரும் 28 ஆம் திகதி வியாழன் காலை உத்தரப் பொங்கலும் விசேட அபிசேகமும் இடம்பெறும். (ஐ-100)

★ ★ ★

கந்தர்மடம், அரசடி வீதி செல்வநாகபூஷணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த அலங்காரத் திருவிழா நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 16 தினங்கள் நடைபெறவுள்ளது.

தினமும் அபிஷேகம் விசேட பூசைகள் நடைபெற்று அம்பாள் வீதியுலா வருதல் இடம்பெறும். (க-7)

★ ★ ★

வட்டுக்கோட்டை — தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வர சுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் நேற்று முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தேர்த்திருவிழாவும், அடுத்த நாள் வியாழக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும்.

மகோற்சவ காலங்களில் தினமும் மாலை 5 மணி முதல் 6 மணி வரை செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் நிகழ்த்தும் ''தேவி பாகவதம்'' தொடர் சொற்பொழிவு இடம்பெறும். (க-7)

★ ★ ★

காரைநகர் - களபூமி தியகரை முருகமூர்த்தி கோயில் வருடாந்த மகோற்சவத்தின் தேர்த்திருவிழா இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கும் நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (க-73)

★ ★ ★

நல்லூர் ஆடியபாத வீதியில் அமைந்துள்ள வாலையம்மன் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட வைரவர் ஆலயத்தின் மகாகும்பாபிஷேகம் இம் மாதம் 27 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தின் பூர்வாங்கக் கிரியைகள் 25 ஆம் திகதி கணபதிஹோமத்துடன் ஆரம்பமாகும். 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறும். (க-7)

உடுப்பிட்டி சந்திரசேகர வீரபத்திரசுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 17 தினங்கள் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் எதிர்வரும் 4 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும். (க-10)

★ ★ ★

வண்ணார்பண்ணை ஸ்ரீவிஸ்வலிங்க மகா கணபதி (பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயில்) ஆலய அலங்கார உற்சவம் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமை வரை நடைபெறவுள்ளது.

உற்சவ தினங்களில் தினமும் மாலை 5.15 மணி முதல் சொற்பொழிவுகள் இடம்பெறும். (க-4)

★ ★ ★

கோப்பாய் மத்தி முத்துமாரி அம்பாள் புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற உள்ளது.

கும்பாபிஷேக பூர்வாங்க கிரியைகள் இன்று புதன்கிழமை ஆரம்பமாகின்றன. எண்ணெய்க்காப்பு சனிக்கிழமை நடைபெறும். (க-72)

★ ★ ★

அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலைக் கந்தசாமி கோயில் தேர்த்திருவிழா இன்று புதன்கிழமையும், தீர்த்தோற்சவம் நாளை வியாழக்கிழமையும் நடைபெறும். 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பூங்காவனத் திருவிழா இடம்பெறும். (க-11)

★ ★ ★

வண்.வடமேற்கு—ஆனைக்கோட்டை கண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்த சாந்தீக மகோற்சவம் நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பதினைந்து தினங்கள் நடைபெறவுள்ளது.

தினமும் விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெறும். அடுத்த மாதம் 4 ஆம் திகதி புதன்கிழமை தேர்த் திருவிழாவும், 5 ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

உற்சவ தினங்களில் தினமும் மாலை 6 மணி முதல் ''செந்தமிழ்க் காவலன்'' ஜெ. கோகலே நிகழ்த்தும் மகாபாரதம் தொடர் சொற்பொழிவும் இடம்பெறும்.

## குடத்தனையில் நூல் நிலையம்

தென்மராட்சி, ஜூன் 20

பருத்தித்துறை பிரதேச சபையினால் குடத்தனையில் மீள் நிர்மாணிக்கப்பட்ட பொது நூல் நிலையம் நேற்று முன்தினம் பிரதேச சபைத் தலைவர் ஐ. ஸ்ரீரங்கேஸ்வரனால் திறந்து வைக்கப்பட்டது. (ம-117)


## உழவு இயந்திர உரிமையாளர்களுக்கான அவசரப் பொதுக்கூட்டம்

உழவு இயந்திர உரிமையாளர் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட உழவு இயந்திர உரிமையாளர்களுக்) கான அவசரப் பொதுக்கூட்டம் நாளை (21-06-2001 வியாழக்கிழமை காலை 10.00மணிக்கு புலோலி பிரதேச சபை பொது நூலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளதால் சகல உழவு இயந்திர உரிமையாளர்களும் தவறாது கலந்துகொள்ளவும்.

தலைவர்,

உழவு இயந்திர உரிமையாளர் சங்கம்.

வல்லிபுரம். (சி/17142)


## விளையாட்டு நிகழ்வுகள்

வலிவடக்கு ஜூன் 20

நல்லூர் பிரதேச சபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்களிடையே பிரதேச சபையினால் நடத்தப்பட்டுவரும் 7 பேர் பங்குபற்றும் - 6 பந்து பரிமாற்றங்கள் கொண்ட—மென்பந்துக் கிரிக்கட் சுற்றுப்போட்டியில் யில் இன்று பிற்பகல் 3-00 மணிக்கு திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு-:

★ திருநெல்வேலி முடமாவடி ஞானவைரவர் சனசமூக நிலைய 'ஏ' அணி எதிர் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய 'ஏ' அணி.

★ கோண்டாவில் மக்கள் முன்னேற்றக்கழக 'ஏ' அணி எதிர் கொக்குவில் நேதாஜி சனசமூக நிலைய அணி.

★ கொக்குவில் சிவகுரு சனசமூக அணி எதிர் திருநெல்வேலி கலாமன்ற சனசமூக நிலைய அணி. (ஐ-86)

★ ★ ★

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் யாழ் மாவட்ட ரீதியாக நடத்தப்பட்டு வரும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 3.30மணிக்கு பல்கலைக்கழக தாச்சி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகள் விவரம் வருமாறு:

**பெண்கள் பிரிவு**

★ கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகம் எதிர் இணுவில் கலாஜோதி விளையாட்டுக்கழகம்.

**ஆண்கள் பிரிவு**

★ நவாலி தென்றல் விளையாட்டுக்கழகம் எதிர் கொக்குவில் ஸ்ரீ மீனாட்சி விளையாட்டுக்கழகம். (86)

## தொண்டர் ஆசிரியருக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ். மேலதிக மாகாணக் கல்விப்பணிமனையில் மே 5 ஆம் திகதி முதல் 9ஆம் திகதி வரை நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் தோற்றி, தொண்டர் ஆசிரியர் சேவையை உறுதிப்படுத்தும் படிவத்தைப் பூர்த்தி செய்து கையளிக்காத தொண்டர் ஆசிரியர்களை நாளை வியாழக்கிழமை காலை 9-30 மணிக்குத் தமது அலுவலகத்துக்கு ,வருகை தருமாறு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி என். தணிகாசலம்பிள்ளை கேட்டுள்ளார்.

சகல ஆவணங்களுடன் சமுகமளித்து தன்னால் வழங்கப்படும் படிவத்தைப் பூர்த்தி செய்து அதிபரின் உறுதியுரையுடன் மீளக் கையளிக்கும்படியும் அவர் கேட்டுள்ளார். (ஐ-3)

## கப்பல் மூலம் விளையாட்டு வீரர்கள் புறப்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 20

திருகோணமலையில் எதிர்வரும் 25 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியின் பெருவிளையாட்டுகளில் (குழுப்போட்டிகள்) கலந்துகொள்ளவுள்ள சில அணிகள் கப்பல் மூலம் நேற்றுத் திருகோணமலைக்குப் புறப்பட்டுச் சென்றன.

நாளைய கப்பலில் செல்லவுள்ள மிகுதி அணி வீரர்களுக்கான பயணச் சீட்டுக்களை இன்று புதன்கிழமை 'றான்' அலுவலகத்தில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டுக்குழு அறிவித்துள்ளது. (க-10)

# 16 மாணவர்களுக்கு கல்வி வளர்ச்சி நிதி

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியம் தமது மாணவர் கல்வி வளர்ச்சி நிதியத்தில் இருந்து 16 மாணவர்களுக்கு நிதி உதவி வழங்கியுள்ளது.

பீடத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 16 மாணவர்களுக்கும் தலா 2 ஆயிரம் ரூபா வீதம் 32 ஆயிரம் ரூபா நேற்று மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

வறிய மாணவர்களைத் தெரிவு செய்து அவர்களின் கல்வி வளர்ச்சிக்காக இத்தகைய நிதி உதவிகளை விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியம் எதிர்வரும் காலங்களிலும் வழங்கத் திட்டமிட்டுள்ளதாக விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத்தின் தலைவர் தெரிவித்தார். (ஐ-6)

# நயினை நாகபூசணி அம்மனுக்கு லண்டனிலிருந்து 'ஜெனரேற்றர்'

## ஊர்மக்கள் அன்பளிப்பு

நெடுந்தீவு, ஜூன் 20

லண்டனில் வசிக்கும் நயினாதீவைச் சேர்ந்த மக்கள் நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயத்திற்கெனப் புதிய ஜெனரேற்றர் ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

44 கே. வி. வலு கொண்ட இந்த ஜெனரேற்றர் தற்சமயம் கொழும்புக்கு வந்து சேர்ந்துள்ளதாகவும் விரைவில் அதனை நயினாதீவுக்கு எடுத்துவருவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் தொடர்பு கொண்டுள்ளதாகவும் ஆலய அறங்காவல் சபைத் தலைவர் ஆ. தியாகராசா தெரிவித்தார். (க-111)

## திரைப்படக் காட்சி

யாழ். பல்கலைக்கழக புற நிலைப்படிப்புக்கள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கும் திரைப்படக்காட்சித் தொடரில் எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 20.00 மணிக்கு பாரதிராஜாவின் ''என் உயிர்த் தோழன்'' திரைப்படம் காண்பிக்கப்படவுள்ளது.

பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் நடைபெற்றுவரும் 'திராவிட அரசியல் குறித்த மீள் விசாரணையில் தமிழ் சினிமா' என்ற தொடரின் ஓர் அங்கமாக இந்தப் படக்காட்சி இடம்பெறும். (க-7)

## முதன்மை ஆசிரியருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ். கல்வி வலயத்தின் முதன்மை ஆசிரியர்கள் அனைவரையும் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். வலயக் கல்விப் பணிமனைக்குச் சமுகமளிக்குமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

'புதுயுகத்துக்கான வழிகாட்டல்' மாணவர் ஆக்கத்திறன் கண்காட்சி தொடர்பாக ஆராயப்படவுள்ளதால் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு அவர் கேட்டுள்ளார். (க-10-51)

## புலோலியில் தமிழ் அறிஞரின் நினைவு தினம்

புலோலியூர் தமிழ்அறிஞர், தமிழ்த் தாத்தா கந்தமுருகேசனாரின் 35 ஆவது ஆண்டு நினைவு தின விழா கடந்த சனிக்கிழமை புலோலியில் யாழ். மாவட்ட கடற்றொழில் பரிசோதகர் எஸ். கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெற்றது.

இவ் விழாவை ஒட்டி மந்திகைச் சந்தியில் உள்ள கந்தமுருகேசனாரின் சிலைக்கு பருத்தித்துறைப் பிரதேச சபைத் தலைவர் ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன், புலோலி பொது நூலகப் பிரதம நூலகர் த. என். எஸ். திருச்செல்வம், வர்த்தகப் பிரமுகர் எஸ். நடராசா ஆகியோர் மலர் மாலை அணிவித்தனர். இதனைத் தொடர்ந்து மலரஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

பருத்தித்துறைப் பிரதேச செயலக நிர்வாக அதிகாரி எஸ். விக்கினேஸ்வரமூர்த்தி, பருத்தித்துறைப் பிரதேச சபைத் தலைவர் ப. ரவீந்திரன் ஆகியோரும் விழாவில் கலந்து கொண்டனர்.


## முதலாம் ஆண்டு நிலைவாழ்வின் நினைவஞ்சலி

மண்ணில் : 13 — 05 — 1924



விண்ணில் : 20 — 06 — 2000

திருமதி

**லூட்ஸ் ஜெயமணி அந்தோனிப்பிள்ளை**

''ஜீவியத்தில் நேசித்தோம் மரணத்தில் மறவோம்''

பார்புகழ எம்மைப் பாங்காய் வளர்த்து
பரமன் பதம் சேர்ந்த பாசமுள்ள அன்னையே
பன்னிரு திங்கள் பறந்தாலும் பற்றுடன்
பிரார்த்திக்கின்றோம் உம் ஆன்ம
இளைப்பாற்றுக்காய்!

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(89518)

உதயன்

## அழுத்தம் கொடுப்பது அவர்கள் கடமை

தென்னிலங்கை மக்களில் கணிசமானோர் போரை விரும்பவில்லை. சமாதானத்தையே விரும்புகிறார்கள். சமீபகாலமாக அவர்களிடம் மாற்றம் உண்டாகியுள்ளது - என்று இப்பத்தியில் சந்தர்ப்பத்துக்கு ஏற்றாற் போல அவ்வப்போது எழுதியிருக்கிறோம்.

சிங்களவர்களும் தமிழர்களும் மோதிக்கொள்வதால் நாட்டின் சனத்தொகையில் சுமார் ஏழு சதவீதமானோரே நன்மை அடைகிறார்கள். ஏனையோருக்கு அதனால் அழிவும், நஷ்டங்களுமே என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த எஸ்.டி. பண்டாரநாயக்கா த்கவல் வெளியிட்டிருக்கிறார்.

இவை எல்லாவற்றையும் விட, தென்னிலங்கையில் இருந்து யாழ்ப்பாணம் வந்துள்ள சமாதானத் தூதுக் குழுவில் அங்கம் வகிக்கும் பேராசிரியர் வண. கும்புறுவேவ வஜிரதேரர் வெளியிட்டிருக்கும் தகவல், எதிர்பாராத ஒன்றாக உள்ளது.

தெற்கில் 95 சதவீதமான மக்கள் போரை வெறுக்கின்றனர். சமாதானப் பேச்சு வார்த்தை மூலமே இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற எண்ணமே உருவாகி வருகிறது - என்று அங்குள்ள நிலைமையை, ஏற்பட்ட மாற்றத்தை வண.தேரர் வெளியிட்டிருக்கிறார்.

எண்பதுகளில் தென்னிலங்கை மக்கள் மத்தியில் போரின் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும்; சமாதானம் ஏற்பட வேண்டும் என்று நிலவிய கருத்து இப்போது மாறிவிட்டது -

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கவேண்டும். இரு தரப்பினரும் மனம் விட்டுப் பேச வேண்டியது அவசியம் - என்றும் வண.தேரர் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

இத்தகைய ஒரு பின்னணியில், என்றும் உருவாகாத ஓர் அரிய சந்தர்ப்பத்தில், அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேசுவதில் உரிய - உளமார்ந்த - ஆர்வத்தையும் வேகத்தையும் காட்டாமல் ஆமை வேகத்தில் செயற்படுவது ஏன்? இந்தக் கேள்வி எல்லோர் மனங்களிலும் எழுகிறது.

தென்னிலங்கை மக்களில் 95 சதவீதமானோர் இனப்பிரச்சினைக்குச் சமாதானப் பேச்சுக்கள் மூலமே தீர்வு காணப்பட வேண்டும் என்று விரும்பும் போது, பிரதமரும் ஏனைய சில ஆளுந்தரப்பு அரசியல்வாதிகளும் போர் முழக்கம் செய்வதும் சமாதானப் பேச்சுக்களுக்குப் பாதகமாகப் பேசுவதும் - பிரசாரம் செய்வதும் - ஏன்?

இதுதான் அரசியல்! பேராசிரியரான தேரர் அவர்கள் கூறியது போல, இந்த நாட்டில் இனப்பிரச்சினை ஒன்று தோன்றியதற்கும், அதற்குத் தீர்வு காணப்படாமல் காலம் கழிவதற்கும் அரசியல்வாதிகளே - சிங்கள அரசியல்வாதிகளே - காரண கர்த்தாக்கள்!

அவர்கள் இனிமேலும் தங்கள் "அரசியலைக் காட்டாமல்" - வழமை போல மக்கள் மீது குதிரைவிடாமல் - மீண்டும் ஒரு சரித்திரத் தவறுக்கு இடங்கொடாமல் - இடித்துரைப்பது - பலவகைகளிலும் அழுத்தங் கொடுப்பது தெற்கு மக்களின் பணியாகும்; கடமையுமாகும்.

இது விடயத்தில் பௌத்த மதத் தலைவர்கள், குருமார் பிரதான பங்கு வகிக்கலாம். இனப்பிரச்சினை உருவாகியதற்கும், அது நீண்டு செல்வதற்கும் அவர்களில் மிகக் கணிசமானோர் காரணம் என்பது வரலாற்றுப் பதிவு.

எனவே பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உதவுவதிலும் - முக்கிய பங்காற்ற வேண்டியதிலும் - அவர்களுக்கும் பொறுப்பு உண்டு.

காணப்பட வேண்டிய தீர்வு தமிழர்களின் உரிமைகளை வழங்கும் நீதியான ஒன்றாக இருக்க வேண்டும்; சமாதானம் நீதியுடன் கூடிய சமாதானமாக மலர வேண்டும் என்பதும் முக்கியம்.

## காணாமற்போனோர் தொடர்பான விசாரணைக்கு அழைக்கப்பட்டோர்

யாழ்ப்பாணம்,ஜூன்20

காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுவரும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர், நால்வர் தொடர்பான விசாரணைகளுக்காக அவர்களின் உறவினர்களை யாழ்.பொலீஸ் நிலையத்துக்கு வருமாறு அழைத்துள்ளனர்.

காணாமற்போனவர்களதும், விசாரணைக்கு அழைக்கப்பட்டவர்களினதும் பெயர் விவரங்கள் வருமாறு:-

★ சின்னட்டி கோபாலகிருஷ்ணன், கைதடி தெற்கு, நாவற்குழி, அழைக்கப்பட்டவர்கள் - சுப்பையா பரமேஸ்வரன், திருமதி சின்னட்டி. (B-77)

★ கதிர்வேலு ஜயந்தி, கொத்திகாமம் தெற்கு, அழைக்கப்பட்டவர் - கதிரவேலு நகுலாங்கேஸ்வரி, நவாலி அரசடி. (A21-1)

★ ராசதுரை சுரேஸ்குமார், வைத்தியசாலை வீதி, கல்வியங்காடு, அழைக்கப்பட்டவர் - அப்பகுதி கிராம சேவகர். (B-76)

★ பெர்னாந்து ஜெயகாந்தன் அழைக்கப்பட்டவர்கள் - ஆசீர்வாதம் பெர்னான்டோ குருசோ வீதி, யாழ்., நாகையா ஜெயராஜினி.

(ம-9)

## சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வு

வடமராட்சி,ஜூன்20

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்ச்சித் தொடரில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் பொ.அருந்தவநாதன் 'திருமந்திரம்' என்னும் தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் அ.குமாரவேல் இந்நிகழ்வுக்கான அறிமுகவுரையை ஆற்றுவார். (ம-173)

## 'பண்டேஜ்'க்கு தட்டுப்பாடு

வடமராட்சி, ஜூன்20

மந்திகை அரசினர் ஆதார வைத்திய சாலையில் 'பண்டேஜ்' துணிகளுக்கு தொடர்ந்து பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இவ்வைத்திய சாலையில் மருந்து கட்ட வரும் காயக்காரர்களை, மருந்து கட்டுவதற்குத் தேவையான துணிகளை எடுத்து வருமாறு அறிவுறுத்தப்பட்டு வருகின்றது. (ம-173)

## நாட்டு நடப்பு

கல்லு பொறுக்கி யெல்லோ
காற்சட்டைக்குள் போட்டபடி
நல்லாற்றை நடுவான்
நடந்து போறான் பள்ளிக்கு!
மெல்லக் கல் பொறுக்கி
மெதுவாகச் சேகரித்தால்
கல்லூரிப் பரிசளிப்புக்கு
கணக்காய் எறியலாமாம்

*- விகடகவி -*

### நாடாளுமன்றில் அமைச்சர் பவித்ரா அறிவிப்பு

# பட்டதாரிகளுக்கு தொழில் வழங்க தகவல் வங்கி அமைக்கப்படும்

### 8 மாதங்களில் வேலை பெற்றிடவும் நடவடிக்கை

கொழும்பு,ஜூன்20

பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் தொழில் ஏதுமின்றியுள்ள பட்டதாரிகளின் விவரங்களைக் கொண்ட வங்கி ஒன்று அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரில் இது தொடர்பாக நியமிக்கப்பபட்ட அமைச்சரவையின் உபகுழு இது பற்றிய நடவடிக்கைகளில் தற்போது ஈடுபட்டுள்ளது என்று திட்ட அமுலாக்கல் அமைச்சர் திருமதி பவித்ரா வன்னியாராய்ச்சி நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

தேசிய கொள்கை அடிப்படையில் அமைக்கப்படும் இந்த வங்கியின் கீழ் வேலையற்ற பட்டதாரிகளுக்கு எட்டு மாதங்களில் வேலை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் சொன்னார்.

மக்கள் விடுதலை முன்னணி எம்.பி.விமல் ரத்நாயக்க சபை ஒத்திவைப்பு வேளையில் கொண்டு வந்த வேலையற்ற பட்டதாரிகள் தொடர்பான பிரேரணைக்கு பதிலளித்துப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வேலையற்றிருக்கும் இருபத்தையாயிரத்துக்கும் அதிகமான பட்டதாரிகளுக்கு நிரந்தரத் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. பட்டதாரிகளுக்கு ஏற்ற தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான சகல நடவடிக்கைகளும் அமைச்சரவை உப குழுவினால் மேற்கொள்ளப்படவுள்ளன.

திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சும், கல்வியமைச்சும் இணைந்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவுள்ளன. வேலையற்றிருக்கும் பட்டதாரிகள் சகலரினதும் விவரங்கள் தற்போது திரட்டப்பட்டுவருவதால் சகலருக்கும் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுக்கும் பணியை விரைவில் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (க-7)



துன்னாலையிலுள்ள நலன்புரி நிலையத்தைச் சேர்ந்த சிறார்களுக்கு பருத்தித்துறை ஸ்ரீசாரதா சேவாச்சிரமமம் சத்துணவாகப் பால் வழங்கியது. சோவாச்சிரம முதல்வர் சுவாமி சித்ரூபானந்தா சிறுவர்களுக்கு பால் வழங்குவதைப் படத்தில் காணலாம். (ஐ)

### யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில்

# எழுதுவினைஞர்களுக்கும் தொழிலாளர் நியமனம்

### அமைச்சு நடவடிக்கை குறித்து விசனம்

யாழ்ப்பாணம்,ஜூன்20

யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரியில் கடமையாற்றும் பல தரங்களிலும் உள்ள 17 பணியாளர்களுக்கு தொழிலாளர் பதவிக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கொழும்பிலுள்ள உயர்கல்வி அமைச்ச் செயலாளரினால் இந்தக் கடிதங்கள் அண்மையில் கல்லூரிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

எழுதுவினைஞர்கள், காவலாளிகள், சாரதிகள், சமையல்காரர்கள் உட்பட 17 பேருக்கு கடந்த வருடம் கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட போது தற்காலிக நியமனங்கள் வழங்கப்பட்டன.

ஒரு வருடத்தின் பின்னர் தற்போது இவர்களின் பதவிகளுக்குரிய நியமனங்கள் வழங்கப்படாமல் அனைவருக்கும் தொழிலாளர் பதவிக்கான நியமனக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டமை குறித்து இங்கு கடமையாற்றுபவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இந்தக் கல்லூரியில் கடமையாற்றும் மேலும் 17 ஊழியர்களுக்கு கடந்த நான்கு மாதமாக சம்பளம் எதுவும் வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கு சம்பளம் வழங்கப்படாமைக்கு உரிய அதிகாரிகள் இவர்களின் விடயத்தில் அக்கறையின்றி இருப்பதே காரணம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(ம-5)

# வேலை முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்கும் பிரதேச சபைகளுக்கு உடன் நிதி விடுவிப்பு

### உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கூறுகிறார்

வலி.தென்மேற்கு,ஜூன்20

பிரமாண அடிப்படையிலான மூலதன வேலைத்திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள் குறித்து 50 வீதமான முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்கும் பிரதேச சபைகளுக்கு உடனடியாக நிதி விடுவிப்புச் செய்யப்படும்.

- இவ்வாறு செயலாளர்களுக்கான விசேட கூட்டத்தில் பேசிய பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.கிருஷ்ணசாமி தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள சில பிரதேச சபைகள் பிரமாண அடிப்படையிலான வேலைத்திட்ட முன்னேற்ற அறிக்கைகளைச் சமர்ப்பதில் காலதாமதம் காட்டுகின்றன. இதனால் அந்தச் சபைகளுக்குரிய நிதியை உரிய காலத்தில் விடுவிப்புச் செய்ய முடியாமல் இருக்கின்றது.

இதனால் அப்பிரதேசத்தின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி என்பன தாமதமடையும் - என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-185)

## நாளை

ஆனி 7
வியாழக்கிழமை
திதி: அமாவாசை
மாலை 6.14 வரை
நட்சத்திரம் : மிருகசீரிடம்
மாலை 7.01 வரை
அமாவாசை விரதம்
சுபநேரம் : 7.24 - 8.54
ராகுகாலம் : 1.24 - 2.54
(பழைய நேரப்படி)

## வாகனம் இல்லாது சங்கானை செயலகப் பணிகள் பாதிப்பு

சங்கானைப் பிரதேச செயலகத்துக்கு வாகனம் இல்லை. இதனால் பிரதேச செயலரும் திட்டமிடல் பகுதியினரும் தமது பணிகளைத் துரித கதியில் மேற்கொள்ள முடியாமல் இருப்பதாகத் தெரியவருகின்றது.

சங்கானைப் பிரதேச செயலகத்துக்கு வழங்கப்பட்ட 'பிக் அப்' வாகனம் இராணுவத்தினரின் பாவனைக்குக் கொண்டு செல்லப்பட்டு, பின்னர் யாழ். நாவலர் வீதியில் விபத்துக்குள்ளானது குறிப்பிடத்தக்கது. (க-175)

## உதயவாக்கு

சுறுசுறுப்புடனும் ஆர்வத்துடனும் செயற்படுபவனுக்குத்தான் இந்த உலகம் சொந்தம்.


கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



இன்றைய தலைமுறையினரும் விரும்பிப் படிக்கக் கூடியவாறு

# பண்டைய இலக்கியங்களை சுவாரஸ்யமாக தருவதில் கைதேர்ந்தவர் சொக்கன்

## 'இலக்கியக் கருவூலம்' நூல் வெளியீட்டு விழாவில் உரை

பண்டைய இலக்கியங்களை இன்றைய தலைமுறையினரும் விரும்பிப் படிக்கக் கூடிய வகையில் சுவாரஸ்யமாகத் தருவதில் சொக்கலிங்கம் ஆசிரியர் மிகவும் கைதேர்ந்தவராக விளங்குகின்றார்.

அண்மையில் யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற வித்துவான் க.சொக்கலிங்கம் (சொக்கன்) எழுதிய "இலக்கியக் கருவூலம்" நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு வெளியீட்டுரை நிகழ்த்திய செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழக தமிழ் மன்றத் தலைவர் அ.பௌநந்தி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆறு.திருமுருகன் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

ஈழத்தமிழர்களின் மரபுவழி இலக்கிய கர்த்தாக்களில் மூத்தவராக விளங்கும் சொக்கன் எழுதிய இந்த அருமையான நூலை வெளியிட்டு வைப்பதில் நான் மிகவும் பெருமையும், மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

ஒரு காலத்திலே யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஒரு வித்துவச் சபையே இருந்தது. இந்த வித்துவச் சபையில் ஒருவராக விளங்கிய சொக்கன் தனது வித்துவத் திறமையின் மூலம் எத்தனையோ அறிஞர்களை உருவாக்கியுள்ளார்.

மரபுவழித் தமிழ் இலக்கியங்களையும், நவீன இலக்கியங்களையும இணைக்கும் இணைப்புப் பாலமாக விளங்கும் சொக்கன் எழுதிய இலக்கியக் கருவூலம் என்ற இந்த நூல் க.பொ.த.உயர்தர வகுப்பு மாணவர்களுக்கும், பல்கலைக்கழக தமிழ்த் துறை மாணவர்களுக்கும் மிகவும் பயன்படக்கூடியது.

தமது இலக்கியப் படைப்புகளிலே மற்றவர்கள் கூறிய கருத்துக்களை மட்டும் மேற்கோள்காட்டாது, சொந்தக் கருத்தையும் துணிவுடன் கூறும் தன்மையை சொக்கனிடம் நிறையவே காணலாம்.

இவரால் இன்று வெளியிடப்படும் "இலக்கியக் கருவூலம்" என்ற நூலானது தமிழ் உலகை என்றுமே அழகு செய்யும்; மாணவர் சமுதாயத்தை வாழ்விக்கும் என்பதில் ஐயமில்லை - என்றார்.

### பேராசிரியர் ஆசியுரை

இந்த நிகழ்வுக்கு ஆசியுரை வழங்கிய தென்னிந்தியத் திருச்சபைப் பேராயர் கலாநிதி சு.ஜெபநேசன் தமது உரையில் -

வித்துவான் சொக்கன் எழுதிய இலக்கயக் கருவூலம் என்னும் நூலின் வெளியீட்டு நிகழ்வானது ஒரு கல்வி சார் நிகழ்வாகவே கருதப்பட வேண்டும். இவ்வாறானதொரு நிகழ்வில் கலந்து கொள்வதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

வித்துவான் சொக்கன் தான் கண்டதையும் அறிந்ததையும் எவ்வித பயமும் இன்றியும், ஒளிவு மறைவின்றியும் கூறுவதில் தனித்துவம் மிக்கவர்.

அண்மையில் அவர் கொழும்பில் இருந்த போது செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் யாழ்ப்பாண மக்களின் தற்போதைய அவல நிலையை மிகவும் துணிவுடன் விளக்கி இருந்தார்.

இவரால் வெளியிடப்படும் இலக்கியக் கருவூலத்தில் உள்ள அனைத்துக் கட்டுரைகளிலும் கலாநிதி ஒருவருடைய சிந்தனை ஓட்டத்தையும் கருத்துச் செறிவையும் நான் காண்கிறேன் - என்றார்.

### வாழ்த்துரை

நிகழ்வுக்கு வாழ்த்துரை வழங்கிய யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை உரையாற்றுகையில் -

யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சமூகத்துடன் இணைந்து பணிகள் பல செய்துவரும் சொக்கன் 50 வருடங்களுக்கும் மேலாகத் தமிழ்ப் பணி செய்து வருகிறார்.

பண்டிதமணி சு.கணபதிப்பிள்ளையின் வழியில் வந்த இவர் பல அரிய நூல்களை வெளியிட்டு வருகிறார். இந்த வரிசையில் இன்று வெளிவரும் இலக்கியக் கருவூலம் என்னும் நூல் தமிழைக் கற்கும் மாணவர்கள், ஆசிரியர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது - என்றார்.

பண்டிதர் க.திருநாவுக்கரசு தமது ஆய்வுரையில், நூலின் ஒவ்வொரு கட்டுரைகள் பற்றியும் விரிவாக விளக்கியதோடு அனைத்துக் கட்டுரைகளும் இன்னும் சற்று நீண்டிருக்கலாமே என வாசகர்களை ஏங்க வைப்பனவாக அமைந்துள்ளன என்று கூறினார்.

யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆய்வுரை நிகழ்த்துகையில்-

தமிழை மிகவும் ஆழமாக நேசிப்பதோடு அதனை வாழ்விக்க பல அரும் பணிகள் செய்து வரும் வித்துவான் சொக்கன் எழுதிய இலக்கியக் கருவூலம் என்ற இந்த நூலானது தமிழிலே கற்க வேண்டியவற்றை சிறப்பாகக் காட்டி நிற்கிறது.

பழமைக்கும் புதுமைக்கும் பாதுகாவலனாக விளங்கும் சொக்கன் தனது இலக்கியங்களின் மூலம் வாசகர்களை முழுமையாகக் கவர்ந்து விடுவார் - என்றார்.

இதனைத் தொடர்ந்து நூலாசிரியர் சொக்கனின் ஏற்புரையும் இடம் பெற்றது. (க-4)

# மகோற்சவம் இம்முறையும் இல்லை

யாழ்ப்பாணம், ஜூன்20

கைதடியில் பிரசித்திபெற்ற ஆலயமான கைதடி வடக்கு கயிற்றசிட்டி கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் இம்முறையும் நடைபெற மாட்டாது என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் மே மாதம் கைதடியில் இருந்து மக்கள் இடம் பெயர்ந்ததைத் தொடர்ந்து இந்த ஆலயம் பூட்டப்பட்டிருந்தது. கைதடியில் மக்கள் மீளக்குடியமரத் தொடங்கியதைத் தொடர்ந்து அண்மையில் ஆலயம் மீண்டும் திறக்கப்பட்டது.

கைதடி மக்கள் இதுவரையும் முழுமையாக மீளக்குடியமராத காரணத்தினால் இம்முறையும் வருடாந்த உற்சவத்தை நடத்தாமல் விடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்குப் பதிலாக உற்சவகாலமான எதிர்வரும் 26ஆம் திகதி தொடக்கம் தொடர்ந்து 10 நாள்களுக்கு விசேட அபிஷேக பூஜை வழிபாடுகளை நடத்துவதென ஆலய நிர்வாகத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உற்சவ நாள்களில் தினமும் காலை 10 மணி தொடக்கம் பகல் 12 மணிவரை விசேட பூஜை வழிபாடுகள் நடைபெறும் என்று ஆலய நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர். (ம-5)

பம்பலப்பிட்டி பாலியல் சித்திரவதை:

# சட்ட மருத்துவ அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவு!

கொழும்பு,ஜூன்20

பம்பலப்பிட்டி பொலீஸ் நிலையத்தில் இரு தமிழ்ப் பெண்களை பாலியல் ரீதியில் சித்திரவதைக்குள்ளாக்கியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக பிரஸ்தாபப் பெண்களின் சட்டமருத்துவ அறிக்கையைச் சமர்ப்பிக்கும்படி தொல்லை தவிர்ப்புக் குழு பொலீஸாரிடம் கேட்டுள்ளது.

பிரஸ்தாபப் பெண்கள் இருவரும் தாம் பாலியல் சித்திரவதைக்கு உளளாக்கப்படவில்லை என வாக்குமூலம் அளிப்பதைக் காட்டும் வீடியோ நாடாவை பிரதிப் பொலீஸ்மா அதிபர் தொல்லை தவிர்ப்புக் குழுவின்ருககு நேற்றுப் போட்டுக் காண்பித்தார்.

அதை ஏற்க மறுத்த தொல்லை தவிர்ப்புக் குழு பிரஸ்தாப பெண்களை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்திய வைத்தியரின் அறிக்கையைச் சமர்ப்பிக்கும்படி பொலீஸாருக்கு உத்தரவிட்டது. (ஐ-3)

# மோதல் சம்பவங்களில் புலிகள் தரப்பில் பலியானோர்

வவுனியா,ஜூன்20

பல்வேறு சம்பவங்களில் தமது தரப்பில் களப்பலியான உறுப்பினர்களின் பெயர் விவரங்களை விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

கடந்த 14ஆம் திகதி திருமலை, இறால் குழிப்பகுதியில் இராணுவத்துடன் இடம்பெற்ற மோதலில் லெப்டினனட் லவன் (அமலநாதன் ஜெகநாதன்) -

கடந்த 15ஆம் திகதி பொலன்னறுவை தம்மிந்தவில் நடந்த மோதலில் கப்டன் சசிகரன் (மாமாங்கம் சின்னவன் - மட்டக்களப்பு) -

கடந்த 16ஆம் திகதி மணலாறு சிலோன் தியேட்டர் பகுதியில் இடம் பெற்ற மோதலில் துணைப்படைவீரர் ஜேசுதாஸன் (ஏகாம்பரம் ஜேசுதாஸன் - யாழ்ப்பாணம்) -

அதேதினத்தன்று மணலாறில் நடந்த மற்றொரு மோதலில் துணைப்படைவீரர் விமலதாஸ் (சின்னக்கொடி விமலதாஸ் - யாழ்ப்பாணம்) - துணைபபடைவீரர் ரமேஷ் (தங்கவேல் ரமேஷ் - யாழ்ப்பாணம்) -

கடந்த 15ஆம் திகதி மன்னார் கட்டை அடம்பனில் இடம்பெற்ற மோதலில் விழுப்புண் அடைந்த வீரவேங்கை தயாளன் (தேவசகாயம் அன்ரன் சுரேஸ் - மன்னார்) -

ஆகியோரே உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (ஒ)

## சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கப் பாலர் பாடசாலை

தென்மராட்சி,ஜூன்20

இடம்பெயர்வினால் இயங்காமல் இருந்த சாவகச்சேரி ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தின் பாலர்பாடசாலை மீண்டும் ஜூலை மாதம் முதல் கரணவாய் வடக்கு, நவிண்டிலில் இயங்கவுள்ளதாக சங்கப் பொது முகாமையாளர் அறிவித்துள்ளார்.

அண்மையில் சங்க நிர்வாகத்தினர் சாவகச்சேரிக்குச் சென்று பாலர் பாடசாலையின் தளபாடங்களை எடுத்து வந்ததை அடுத்தே அதனை மீளவும் இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (க-117)

## ப.நோ.கூ.சங்கப் பணியாளருக்கான கலந்துரையாடல்

சாவகச்சேரி ப.நோ.கூ. சங்கப் பணியாளர்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நெல்லியடி திருமகள் சோதி வீதியில் உள்ள சங்கத்தலைமை அலுவலகத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-117)


அருந்திவிட்டீர்களா!

**பனையின் போஷாக்குமிக்க இயற்கைப் பானம் (பதநீர், கருப்பநீர்)**

எமது சகல கற்பக விற்பனை நிலையங்களிலும் விற்பனையாகின்றது. குளிரூட்டப்பட்ட 190மி.லீ. போத்தல் ஒன்றின் விலை ரூபா5/= மட்டுமே. மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடங்கள்.

| | |
|---|---|
| இல.53, கண்டி வீதி, யாழ்ப்பாணம். | கற்பகம் இல.499, பருத்தித்துறை வீதி, நல்லூர். |
| இல.5, சோமசுந்தரம் வீதி, சுண்டுக்குளி. | |
| கற்பகம் பருத்தித்துறை வீதி, மாலுசந்தி. | கற்பகம் இல.30, நவீன சந்தை, சுன்னாகம். |

பனைஅபிவிருத்திச் சபை
தலைமைச் செயலகம், யாழ்ப்பாணம். (C/17147)



பிரதான அறிவித்தல்

ராணி சினிமா, 133, மின்சார நிலைய வீதி வளவில் அமைநதுள்ள ஆறுவரிசைக் கடைகளில் இருந்து விமாகி கட்டடம், பின்புறம் உள்ள "வின்சிலோ" கராச வரையிலான எல்லாக் கடைகளையும் வேறு எவருக்கும் கீழ் வாடகைக்கோ அல்லது வேறு எவ்விதத்திலுமோ கைமாற்றம் செய்வதற்கு எவருக்கும் அதிகாரம் இல்லை என்பதை இத்தால் சகலருக்கும் அறிவிக்கின்றேன்.

திரு.தி.ஸ்கந்தராசா
(அற்றோனித் தத்துவக்காரர்)
*கனகரத்தினம் வீதி,*
*வட்டுக்கோட்டை.*
(89179)


# ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணில் 1916 - 09 - 11

விண்ணில் 2000 - 06 - 30

மயிலிட்டி

## அம்பலவாணர் இலங்கைநாயகம்

**திதி : சதுர்த்தசி 20-06-2001**

**எங்கள் அன்புத் தெய்வமே!**
**ஆண்டொன்று ஓடி மறைந்தாலும்**
**என்றும் அகலாத நினைவுகளோடு**

தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்:

*கற்பொக்குணை,*
*உடுவில்.*

**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

(C/17123)

# முதலாம் ஆண்டு நினைவினில் .....



தோற்றம் 19 - 08 - 1930

மறைவு 21 - 06 - 2000

## அமரர் செல்லர் பூபாலசிங்கம்

**பேரோடும் புகழோடும்**
**பெருமையாய்ப் பலர் மதிக்க**
**வாழ்ந்து எம்மை வாழவைத்த எம் அன்புத் தெய்வமே!**
**ஓராண்டு நிறைவாகும்**
**இந்நாளும் எந்நாளும்**
**நீங்காத அன்புடனே உங்களைச்**
**சிந்தையில் வைத்து வணங்குகின்றோம்!**

*பிரிவால் துயருறும்:*
மனைவி : பவளம்
மகள் : சசிகலா
மருமகன் : கருணாகரன்
பேரப்பிள்ளைகள்: ரஜித்தா, ரஜிந்தன், கனுஜா.

*திருமகள் வீதி,*
*அரியாலை.*

(89176)

# குடிசன மதிப்பீடு மூலம் பல்வேறு தகவல்களை அரசாங்கம் அறிந்து செயற்படும் வாய்ப்பு

**எதிர்வரும் 25ஆம் திகதி ஆரம்பித்து ஜூலை 17ஆம் திகதி இறுதிக் கட்ட கணக்கெடுப்புடன் முடிவடையவுள்ள 13ஆவது குடிசன மதிப்பீட்டை தமிழ் அரசியல்வாதிகள் ஏன் எதிர்க்கிறார்கள்; குடிசன மதிப்பீடு எவ்வாறு நடைபெறவுள்ளது என்பன போன்ற விடயங்களை இக்கட்டுரை ஆராய்கிறது. தமிந்த ஜீவான் ரணசிங்க என்பவரால் எழுதப்பட்டு "லக்பிம" வார இதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

## இருபது வருடங்களின் பின்னர் நடக்கும் கணக்கெடுப்பில் வடக்கு - கிழக்கு நிலை என்ன?

ஸ்ரீலங்காவின் 13ஆவது குடிசன மதிப்பீடு இம்மாதம் 25ஆம் திகதி ஆரம்பமாகிறது. அப்போது நாட்டிலுள்ள அனைத்து வீடுகளுக்குச் செல்லும் குடிசன மதிப்பீட்டு ஊழியர்கள் அந்த வீடுகளில் தங்கியுள்ள ஒவ்வொரு பிரஜையிடமிருந்தும் இரகசியத் தகவல்களைப் பெறவுள்ளனர். இவ்வாறு பெறப்பட்ட இரகசியத் தகவல்கள் அனைத்தும் ஒன்று சேர்க்கப்பட்ட பின்னர் பெறப்படும் புள்ளி விவரங்கள் நாட்டுக்கு எவ்விதத்தில் பொருத்தமானவை என்பதையும் பல்வேறு தரப்பினரும் இந்தக் குடிசன மதிப்பீட்டை எவ்வாறு நோக்குகின்றார்கள் என்பதையும் பார்ப்போம்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் குடிசன மதிப்பீடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது என இற்றைக்கு 2 வருடங்களுக்கு முன்னர் 'தமிழ் நெற்' (TAMIL NET) என்னும் செய்திச் சேவையில் தெரிவிக்கப்பட்டது. யாழ்.மாவட்டத்திலுள்ள கிராம சேவை அலுவலர்களுக்கு யாழ்.கச்சேரியில் அளிக்கப்பட்ட விளக்கவுரை நிகழ்வே 'தமிழ் நெற்'றில் ஏப்ரல் 12ஆம் திகதி வெளியான செய்திக்கு மூல காரணமாக அமைந்தது.

யாழ்ப்பாணத்தில் அனைத்து நிர்வாக நடவடிக்கைகளிலும் இராணுவமும் பங்கு கொள்கிறது. எனவே யாழ்.கச்சேரியில் இடம்பெற்ற மேற்படி நிகழ்விலும் இராணுவம் பங்குபற்றியது. இராணுவத்தினரின் தலையீட்டுடனேயே யாழ்ப்பாணத்தில் குடிசன மதிப்பீட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் கிராம சேவை அலுவலர்கள் வீடுகளுக்கு வழங்கப்படும் குடிசன மதிப்பீட்டுப் படிவங்களைப் பின்னர் இராணுவத்தினர் அந்தந்த வீடுகளுக்குச் சென்று சேகரிப்பர் எனவும் 'தமிழ் நெற்' செய்திச் சேவையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அரசின் நிர்வாகத் தேவைகளுக்காக மேற்கொள்ளப்படும் குடிசன மதிப்பீட்டை விரைவுபடுத்த இராணுவம் முயற்சித்தது என அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது. அதற்கு ஒரு காரணமும் கூறப்பட்டது. அதாவது யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பு நிலைவரத்தைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கு இராணுவத்திற்கு குடிசன மதிப்பீடு தொடர்பான தகவல்கள் தேவைப்பட்டன எனக் கூறப்பட்டது.

### மதிப்பீட்டின் மூலம் முக்கிய விவரங்கள்

நாட்டில் எத்தனை கட்டடங்கள் உள்ளன? நாட்டின் மக்கள் தொகை எவ்வளவு என்பன குறித்து அரசு பத்தாண்டுகளுக்கு ஒரு முறை மதிப்பீடு செய்ய வேண்டும். மக்களின் கல்வித்தரம், சுகாதார நிலைமைகள், வேலையற்றிருப்போரின் எண்ணிக்கை ஊனமுற்றோரின் எண்ணிக்கை, போன்ற முக்கிய தகவல்களையும் மக்களின் வீட்டு வசதிகள், மின் விநியோகம், மலசலகூட வசதிகள், நீர் விநியோகம் போன்ற தகவல்களையும் அரசு இந்த மதிப்பீட்டின் மூலமே அறிந்து கொள்ளுகிறது.

ஒரு நாடு மக்களுக்காக அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிக்கும் போது அந்நாட்டின் அரசு கட்டாயமாக குடிசன மதிப்பீட்டில் இருந்து பெறப்படும் தகவல்களைக் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

குடிசன மதிப்பு புள்ளி விவரத் திணைக்களம் 1871ஆம் ஆண்டிலிருந்து பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை குடிசன மதிப்பீட்டை மேற்கொண்டு வருகிறது. 1868ஆம் ஆண்டில் பிரகடனப்படுத்தப்பட்ட குடிசன மதிப்பு கட்டளைச் சட்டத்திற்கிணங்கவே இந்த மதிப்பீடு நடத்தப்படுகிறது. இருப்பினும் 1991இல் மேற்கொள்ளப்பட வேண்டிய குடிசன மதிப்பீட்டை குடிசன மதிப்பீடு புள்ளி விவரத் திணைக்களம் மேற்கொள்ளவில்லை.

குடிசன மதிப்பீட்டை மேற்கொள்வதற்கான ஆயத்தங்களைச் செய்ய அந்தத் திணைக்களத்திற்கு சுமார் மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் தேவைப்படுகிறதாம்.

### 1991இல் மதிப்பீடு நடத்தவில்லை

1980 -1990ற்கு இடைப்பட்ட காலத்தின் பிற்பகுதியில் நாட்டில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களும் அக்காலப் பகுதியின் முற்பகுதியில் வடபகுதியில் இடம்பெற்ற 2ஆவது ஈழப் போர் காரணமாகவும் 1991இல் மேற்கொள்ளப்பட வேண்டிய குடிசன மதிப்பீட்டிற்கான ஆயத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியவில்லையென குடிசன மதிப்பீடு, புள்ளி விவரத் திணைக்களம் தெரிவிக்கிறது.

பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்பட வேண்டிய குடிசன மதிப்பீடு இம்முறை 20 ஆண்டுகளுக்குப் பின்னரே மேற்கொள்ளப்படவுள்ளது என அந்தத் திணைக்களம் தெரிவிக்கிறது.

குடிசன மதிப்பீடு குறித்து தமிழ் செய்தி ஊடகங்களின் அடிப்படைக் கருத்துக்களே இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் 'தமிழ் நெற்' மூலம் பிரசாரம் செய்யப்பட்டது.

2001ஆம் ஆண்டில் குடிசன மதிப்பீடு நடத்தப்பட்டால் வடக்கில் வாழும் தமிழ் பேசும் மக்களுக்குப் பாதிப்புகள் ஏற்படும் என இந்தியாவில் இருந்து வெளியாகும் "ஹிந்து" (HINDU) செய்தித்தாள் கட்டுரை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது. 1999 ஏப்ரல் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை "ஹிந்து" இதழில் "Jaffna Census, Counting may show reduced population" என்ற தலைப்பில் அக்கட்டுரை வெளியாகியிருந்தது.

### "ஹிந்து" கருத்து

1981ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின்படி யாழ்.குடாநாட்டின் குடிசனத் தொகை 8 லட்சத்து 31 ஆயிரத்து 112 எனத் தெரிவித்த அந்தக் கட்டுரை அந்த சனத்தொகையில் 95.3 சதவீதமானோர் இலங்கைத் தமிழர் எனவும் தற்போது இவர்களில் பெரும்பாலானோர் வெளிநாடுகளில் குடியேறியும் தலைநகர் கொழும்புக்குச் சென்றும் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களுக்குச் சென்றும் உள்ளதால் குடிசன மதிப்பீடு மேற் கொள்ளப்பட்டால் யாழ்.குடாநாட்டில் மக்கள் தொகை குறைந்தே காணப்படும் என மேலும் தெரிவித்தது.

எனவே, யாழ்.குடாநாட்டிற்கான நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைய வாய்ப்புக்கள் உள்ளன என அக்கட்டுரை எச்சரித்தது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் "ஹிந்து" பத்திரிகையில் வெளியான கருத்தையே அண்மையில் தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினரான மாவை சேனாதிராஜாவும் வெளியிட்டிருந்தார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இருந்து அதிகமான மக்கள் இடம் பெயர்ந்துள்ளதால் குடிசன மதிப்பீட்டின் பின்னர் யாழ்.மாவட்டத்திற்கான நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையும் தமிழ் மக்களுக்கான உரிமைகளும் கிடைக்காமற்போக வாய்ப்புக்கள் உள்ளன என மாவை சேனாதிராஜா "லக்பிம" நாளேட்டுக்குத் தெரிவித்திருந்தார்.

அவ்வாறே குடிசன மதிப்பீட்டை ஒத்திவைக்குமாறு ரெலோ மற்றும் ஈபி.ஆர்.எல்.எவ். கட்சிகளும் அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளன.

குடிசன மதிப்பீட்டுக்குப் பின்னர் வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் மக்களின் எண்ணிக்கையின் சதவீதத்தில் மாற்றங்கள் ஏதுமிருப்பின் அது விடுதலைப் புலிகளின் ஈழ இராச்சியக் கோட்பாட்டைப் பாதிக்கும் என ஊடகவியலாளரான மொஹான் சமரநாயக என்பவர் எமக்குத் தெரிவித்தார்.

### சிஹல உறுமய எம்.பியின் கருத்து

குடிசன மதிப்பீடு குறித்து தமிழ்க் கட்சிகள் எதிர்ப்பைக் காட்டுவதற்கு முக்கிய காரணங்கள் இரண்டு உள்ளன என சிஹல உறுமயக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

"1991இல் குடிசன மதிப்பீட்டை மேற்கொள்ளாது பொதுத் தேர்தல் நடத்தப்பட்டதால் தமிழ்க் கட்சிகளுக்கு மேலதிகமாக ஐந்து ஆசனங்கள் (நாடாளுமன்ற உறுப்பினர்கள்) கிடைத்துள்ளன. ஆனால் குடிசன மதிப்பீடு மேற்கொண்ட பின்னர் தேர்தல் நடத்தப்பட்டிருப்பின் தமிழ்க் கட்சிகளுக்கு அந்த ஆசனங்கள் கிடைக்காமல் போயிருக்கும்.

வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுக்கும் அகதி முகாம்களுக்கும் மேலதிகமாக உணவு மற்றும் மருந்துப் பொருள்களைப் பெறுவதற்காக அவர்கள் முயற்சிப்பது மற்றொரு காரணமாகும்.

1999ஆம் ஆண்டில் மடுத் தேவாலயத்தில் 35 ஆயிரம் அகதிகள் தங்கியுள்ளனர் என அவர்கள் தெரிவித்தனர். ஆனால் உண்மையில் 7 ஆயிரம் அகதிகளே அங்கு தங்கியிருந்தனர். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள அரசாங்க அதிபர்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளதால் குடிசன மதிப்பீட்டின் போது தங்களுக்குத் தேவையானவற்றை அரசாங்க அதிபர்கள் மூலம் மேற்கொள்ள விடுதலைப் புலிகள் முயற்சி செய்வர்" எனச் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

### வன்னி நிலைமை குறித்து...

"வடக்கு, கிழக்கில் குடிசன மதிப்பீட்டை மேற்கொள்வதன் மூலம் வட பகுதியிலும் வன்னியிலும் உள்ள தமிழ் மக்களின் பொருளாதார மற்றும் சமூக நிலைமைகளைக் கண்டறிய முடியும்" என ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் கிமல் ரத்னாயகா தெரிவித்துள்ளார்.

இற்றைக்கு 2 ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது 1999 மார்ச் மாதத்தில் வன்னிப் பகுதியில் குடிசன மதிப்பீட்டை மேற்கொள்வது தொடர்பாக குடிசன மதிப்பீடு புள்ளிவிவரத் திணைக்களம் அவநம்பிக்கை கொண்டிருந்தது. அப்போது அத்திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துடன் நாம் மேற்கொண்டிருந்த பேட்டியின் ஒரு பகுதியை கீழே தருகிறோம்.

*கேள்வி:* 2001ஆம் ஆண்டு நடைபெறவுள்ள குடிசன மதிப்பீடு தொடர்பாக தற்போதே சகல ஆயத்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன என அறிகிறோம். வடக்கு-கிழக்கில் யுத்தம் நடைபெறுவதால் அப்பகுதியில் குடிசன மதிப்பீட்டை எவ்வாறு நடத்தவுள்ளீர்கள்?

*பதில்:* 2001ஆம் ஆண்டின் போது நிலைமைகளில் பல மாற்றங்கள் ஏற்படும் என நாம் நினைக்கிறோம். நாட்டில் அமைதி நிலவக்கூடும். நிலைமைகளில் மாற்றங்கள் எவையும் ஏற்படாவிடின் குடிசன மதிப்பீட்டை மேற்கொள்ளக்கூடிய பகுதிகளில் இயல்பான விதத்தில் குடிசன் மதிப்பீட்டை மேற்கொள்ளலாம் எனவும் அவ்வாறு மேற்கொள்ள முடியாத பகுதிகளில் ஆகக் குறைந்தது எத்தனை பேர் வசிக்கிறார்கள் என்பதைக் கணக்கெடுக்கலாம் என எதிர்பார்க்கிறோம்.

*கேள்வி:* அதை எவ்வாறு மேற்கொள்ள முடியும்?

*பதில்:* பிரதேச செயலர் பிரிவுகள், கிராம அலுவலர்கள் பிரிவுகளின் அதிகாரிகளைக் கொண்டு அப்பகுதிகளில் எத்தனை பேர் வாழ்கின்றனர் என்பதைக் கண்டறியலாம் என எதிர்பார்க்கிறோம். தற்போது அந்தப் பணி நடைபெறுகிறது.

*கேள்வி:* முல்லைத்தீவு மாவட்டத்தில் பிறப்புகளைப் பதிவு செய்தல் போன்ற பணிகள் உரிய முறையில் நடைபெறவில்லை என அண்மையில் தெரிவிக்கப்பட்டது. இத்தகைய குழப்பமான நிர்வாகம் குடிசன மதிப்பீட்டின் போது பிரச்சினை உருவாக்கக் கூடுமல்லவா?

*பதில்:* இந்த நிர்வாகப் பலவீனம் எமது திணைக்களத்தைப் பெரிதும் பாதிக்காது. இருப்பினும் அது ஒரு பிரச்சினைதான்.

*கேள்வி:* குடிசன மதிப்பீட்டின் போது மக்களின் நிலைமை, தொழில் ஆகிய அனைத்தும் வெவ்வேறாக அறியப்படுகிறது. ஆனால் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது இவ்வாறான தகவல்களை எவ்வாறு பெறமுடியும்.

*பதில்:* ஆகக் குறைந்தது ஆண்கள் எத்தனை பேர் பெண்கள் எத்தனை பேர் மற்றும் அவர்களது வயது போன்ற பொதுவான தகவல்களை அறிய முடியும்.

### பணிப்பாளர் கருத்து

மேற்படி பேட்டி 2 ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்றது. இவ்விடயம் தொடர்பாகக் கடந்த மார்ச் மாதத்தில் அதாவது 2 வருடங்களின் பின்னர் மீண்டும் குடிசன மதிப்பு புள்ளி விவரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தைச் சந்தித்தோம். முன்னர் கருதியது போல வன்னிப்பகுதியில் குறைந்த அளவில் தகவல்களைத் திரட்ட பிரதேச செயலர்கள் விரும்பாத காரணத்தினால் வன்னிப் பகுதியில் பொதுவான அடிப்படையில் மதிப்பீடு மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில் 15.05.2001 திகதிய "லக்பிம" நாளிதழின் முன்பக்கத்தில் குடிசன மதிப்பீட்டை மேற்கொள்ள வசதியாக யுத்த நிறுத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு குடிசன மதிப்பு புள்ளிவிவரத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் விடுதலைப் புலிகளுக்கு வேண்டுகோள் விடுத்ததாக செய்தி வெளிவந்தது.

இந்தக் கோரிக்கையை அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகர் பணிமனை (UNHCR) ஊடாகவே விடுக்கப்பட்டிருந்தது. இருப்பினும் விடுதலைப் புலிகளிடமிருந்து சாதகமான பதில் இதுவரை கிடைக்கவில்லை.

தற்போது வீடுகள் மற்றும் குடிசன மதிப்புத் தொடர்பான வரைபடத் தயாரிப்பு, வீடுகளில் ஒட்டப்படும் இலக்க 'லேபல்'களை ஒட்டும் பணி ஆகியன முடிவுற்று இருக்கவேண்டும். வன்னிப் பகுதியில் இந்தப் பணிகள் எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றன என நாம் ஆணையாளர் நாயகத்திடம் வினவிய போது வன்னிப் பகுதியில் வரைபடத் தயாரிப்பு மற்றும் 'லேபல்' ஒட்டும் பணிகள் சுமார் மூன்று வாரங்களுக்கு முன்னர் முடிவடைந்துவிட்டன எனத் தெரிவித்தார்.

### 41.7. கோடி ரூபா ஒதுக்கீடு

அரசு இம்முறை குடிசன மதிப்பீட்டுப் பணிகளுக்கு 41.7 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது. வீடுவீடாகச் சென்று குடிசன மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு சுமார் ஒரு லட்சம் தற்காலிக ஊழியர்களை ஒப்பந்த அடிப்படையில் சேவையில் அமர்த்தவுள்ளோம்.

**தமிழில்: கஜனி**

மதிப்பீடுகளை மேற்கொள்ளும் அதிகாரிகளுக்குத் தலா ஆயிரம் ரூபாவைத் திணைக்களம் வேதனமாக வழங்கும். மதிப்பீடுகளை மேற்கொள்ளும் அதிகாரிகள் தவிர்க்க முடியாத சூழ்நிலையால் பணிக்கு வராவிடின் அவர்களுக்குப் பதிலாக மேலதிக அதிகாரிகள் தயார் நிலையில் இருப்பர். அவர்களுக்கு தலா 500 ரூபாவை அரசு வழங்கும். மதிப்பீட்டு அதிகாரிகளுக்கு வழங்கப்படும் வேதனம் மற்றும் கொடுப்பனவுகளுக்காக 12.4 கோடி ரூபாவை அரசு ஒதுக்கியுள்ளது.

குடிசன மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும் வேளையில் நாட்டிலுள்ள அனைத்து அரசாங்க அதிபர்களும் மதிப்பீட்டு ஆணையாளர்களாகவும் அனைத்துப் பிரதேச செயலர்களும் பிரதி மதிப்பீட்டு ஆணையாளர்களாகவும் கருமமாற்றுவர். நாட்டிலுள்ள 14 ஆயிரம் கிராம சேவை அலுவலர்களும் மதிப்பீட்டு அதிகாரிகளாக நியமிக்கப்படுவர். நாட்டிலுள்ள அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளுடன் தலா ஒருவர் வீதம் புள்ளிவிவர அதிகாரிகள் இணைக்கப்பட்டுள்ளனர்.

குடிசன மதிப்பீடுகள் தொடர்பாக போக்குவரத்துக்களை மேற்கொள்ள அரசு 1.5 கோடி ரூபா பெறுமதிக்கு மோட்டார் சைக்கிள்களை வழங்கியுள்ளது.

### ஆண்டுதோறும் புள்ளி விவரங்கள்

20 ஆண்டுகளாக அரசு குடிசன மதிப்பீட்டை மேற்கொள்ளாவிடினும் இலங்கை மத்திய வங்கி அறிக்கையில் குடிசன மதிப்பீடு தொடர்பான புள்ளிவிவரங்கள் ஆண்டுதோறும் வெளியாகின்றன. பதிவாளர் நாயகத்தால் (REGISTAR GENERAL) வழங்கப்படும் தகவல்களின் அடிப்படையிலேயே இலங்கை மத்திய வங்கி அறிக்கையைத் தயாரிக்கிறது.

பிறப்பு எண்ணிக்கையில் இருந்து இறந்தவர்களின் எண்ணிக்கையைக் கழிக்கும் போதுவரும் எண்ணிக்கையை வைத்து இயல்பான குடிசனப் பெருக்கத்தைக் கண்டறிந்து அது தொடர்பான அறிக்கையும் குடிவரவு எண்ணிக்கையிலிருந்து குடியகல்வு எண்ணிக்கையைக் கழித்துவரும் எண்ணிக்கையை வைத்து அதிகரித்து வரும் குடியேற்றம் குறித்த அறிக்கையையும் தயாரித்து இந்த இரு அறிக்கைகளின் அடிப்படையிலேயே இலங்கை மத்திய வங்கி ஆண்டுதோறும் குடிசன மதிப்புக் குறித்த அறிக்கையைத் தயாரிக்கிறது.

இன்னும் ஒரு சில தினங்களில் மேற்கொள்ளப்படவுள்ள குடிசன மதிப்பீடு உரிய விதத்தில் மேற்கொள்ளப்படுமேயானால் மத்திய வங்கியும் அரச ஊடகங்களும் முன்வைக்கும் அபிவிருத்தி தொடர்பான தவறுகள் வெளிவர வாய்ப்புக்கள் உள்ளன என ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் கிமல் ரத்னாயகா தெரிவித்துள்ளார்.

### குடிசன மதிப்பீடு 1941 இல் ஒத்திவைப்பு

1941 ஆண்டு நடத்தப்பட வேண்டிய குடிசன மதிப்பீடு 2ஆவது உலக யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த காரணத்தால் 5 ஆண்டுகளுக்குப் பிற்போடப்பட்டது. கடுமையான கடதாசித் தட்டுப்பாடு காரணமாக, 1951 இல் நடைபெறவிருந்த குடிசன மதிப்பீடு 2 ஆண்டுகளுக்குப் பிற்போடப்பட்டது.

1991இல் நடைபெறவிருந்த குடிசன மதிப்பீடு தென்பகுதிக் கிளர்ச்சிகளாலும் வடபகுதி யுத்தத்தாலும் நடத்தப்படாவிடினும் ஓரிரு ஆண்டுகளில் நடத்த வாய்ப்பிருந்தது. இருப்பினும் ஆட்சியில் இருந்த ஐ.தே. கட்சியானது தனது பதவிக் காலத்தில் குடிசன மதிப்பீட்டை மேற்கொள்வதில் அக்கறை கொள்ளவில்லை.

ஐ.தே.கட்சியின் ஆட்சிக் காலத்தில் குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருப்பின் தென்பகுதிக் கிளர்ச்சியின் போது (ஜே.வி.பி.) காணாமற்போன இளைஞர்கள், யுவதிகள் பற்றிய தகவல் வெளிவந்துவிடலாம் என்ற அச்சத்தினாலேயே ஐ.தே. கட்சி தனது ஆட்சிக்காலத்தில் குடிசன மதிப்பீட்டை மேற்கொள்ளவில்லை எனவும் தேர்தல் வாக்குறுதிகளைக் கூட நிறைவேற்ற முடியாத பொதுமக்கள் ஐக்கிய முன்னணி குடிசன மதிப்பீடு தொடர்பாக ஏனோ தானோ போக்கைக் கடைப்பிடிக்கிறது எனவும் ஜே.வி.பி. குற்றஞ்சாட்டுகிறது.

### ஜனாதிபதி உத்தரவு

2001 இல் குடிசன மதிப்பீட்டை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதியால் குடிசன மதிப்பீடு புள்ளிவிவரத் திணைக்களத்திற்கு உத்தரவிடப்பட்டது. இந்த உத்தரவு 2000 ஜனவரி மாதத்திலும் விடுக்கப்பட்ட வேளையில் வடக்கு - கிழக்கில் யுத்தம் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது.

அரசால் முன்வைக்கப்பட்ட புள்ளி விவரங்கள் குறித்து சர்வதேச நாணய நிதியம் திருப்தியடையாத காரணத்தினாலேயே 2001இல் குடிசன மதிப்பீட்டை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டார் என்பது ஒரு சிலரது கருத்தாகும். அவர்களது கூற்றுப்படி சர்வதேச நாணய நிதியத்திற்கு சிறிலங்கா தொடர்பான சரியான புள்ளி விவரங்கள் தேவைப்படுகின்றன.

20 வருடங்களின் பின்னர் குடிசன மதிப்பீடு நடத்தப்படுவதால் மதிப்பீட்

(8ஆம் பக்கம் பார்க்க)

அம்பாறை மாவட்டத்தில்

# துண்டுப் பிரசுரம் விநியோகித்த ஜே.வி.பியினர் தாக்கப்பட்டனர்

## முஸ்லிம் காங்கிரஸ் மீது குற்றச்சாட்டு

கொழும்பு,ஜூன்20

கிழக்கில் சம்மாந்துறை மற்றும் அக்கரைப்பற்றுப் பகுதிகளில் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்துக் கொண்டிருந்த தமது கட்சி ஆதரவாளர்கள் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தோரால் தாக்கப்பட்டிருப்பதாக ஜே.வி.பி. குற்றஞ்சாட்டி உள்ளது.

கல்முனை தனி மாவட்டம் அமைக்கப்படுவதற்கு ஜே.வி.பி. எதிர்ப்புத் தெரிவிப்பதற்கான காரணங்களை உள்ளடக்கிய கையேடுகளை விநியோகித்துக் கொண்டிருந்த சமயமே தமது ஆதரவாளர்கள் தாக்கப்பட்டதாக ஜே.வி.பியின் தகவல் தொடர்புச் செயலாளர் விமல் வீரவன்ச ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தமது கட்சி ஆதரவாளர்கள் மீது முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்தோர் நடத்திய முதல் தாக்குதல் இது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அட்டாளைச்சேனைப் பகுதியில் தமது ஆதரவாளர்கள் மீது நடத்தப்பட்ட மற்றொரு தாக்குதல் சம்பவத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளரான ரவூப் ஹக்கீமுக்கு நெருங்கியவரான அக்கரைப்பற்று பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் சம்பந்தப்பட்டிருந்தது உறுதி செய்யப்பட்டிருப்பதாகவும் ஜே.வி.பி. விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-ஒ)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 14 - 11 - 1943 | 20 - 06 - 2000 |

### செல்வி
### சவிரிமுத்து அருள் திரேசா
(லீலா)

ஆண்டொன்று ஓடி மறைந்தாலும் உங்கள் அருள் வதனம் என்றுமே எம்மை விட்டகலாது! இரக்கம் நிறைந்த இறைவா! திருமுழுக்கு வழியாக உமது சொந்தப்பிள்ளையாக அழைத்துக் கொண்ட சவிரிமுத்து அருள்திரேசாவுக்காக உம்மிடம் வருகின்றோம். அவர் தம்வாழ்வில் கட்டிக்கொண்ட குற்றங்களை மன்னித்து யேசுவின் உயிர்ப்பின் மாட்சிமையில் பங்கு பெற அருள் கூரும். இவருக்காக இன்றைய நாளிலும் தொடரும் நாள்களிலும் செபிக்கும்படியாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

*386, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம்.* (89181)

*இவரின் பிரிவால் துயருறும்*
தாய், சகோதர, சகோதரிகள்.

### விளையாட்டுப் போட்டி

ஏழாலை மேற்கு லெனின் சன சமூக நிலைய அறவழி மழலைகள் கல்விப் பூங்காவின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் ஏழாலை மேற்கு சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் செ.ஜெயலிங்கம் தலைமையில் நடைபெற்றது. வலி. தெற்கு பிரதேச சபைத்தலைவர் க.கமலசேகரன்(பாபு) இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மழலைகளுக்குப் பரிசளித்தார். (ஐ-152)

### குடிசன...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

டின் போது பெறப்படும் தகவல்களின் எண்ணிக்கையும் அதிகமாகின்றன.

வேலை இழந்தோர் எண்ணிக்கை, சுற்றாடல்களுக்கு ஏற்படும் அழிவுகள் மற்றும் 'ரியூசன்' வகுப்புகள் போன்ற விடயங்கள் பற்றிய தகவல்களைப் புதிதாகத் திரட்ட நேரிடுகிறது.

குடிசன மதிப்பீட்டின் முதலாவது கட்டம் இம்மாதம் 25ஆம் திகதி ஆரம்பமாகிறது. கணக்கெடுக்கும் ஊழியர்கள் படிவங்களுடன் வீடுவீடாகச் சென்று அப்போது அங்கு இருப்பவர்கள் பற்றிய விவரங்களை படிவங்களில் நிரப்புவர். இந்த நடவடிக்கை ஜூலை 5ஆம் திகதிவரை நடைபெறும்.

குடிசன மதிப்பீடு தொடர்பான இறுதிக் கட்ட நடவடிக்கை. அதாவது கணக்கெடுப்பு ஜூலை 17ஆம் திகதி நடைபெறும். அன்று மாலை 6.00 மணியிலிருந்து நள்ளிரவு 12.00 மணி வரை மதிப்பீட்டு அலுவலர்கள் ஏற்கனவே விஜயம் செய்த வீடுகளுக்கு அதாவது ஆரம்பக் கட்டத்தின் போது விவரங்களைத் திரட்டிய வீடுகளுக்குச் சென்று ஏற்கனவே படிவங்களில் பதியப்பட்டவர்கள் இருக்கிறார்களா? எனச் சரிபார்ப்பர்.

அவ்வீடுகளில் புதிதாக யாரும் இருப்பின் அவர்களது விவரங்களைப் புதிதாகப் பதிவு செய்வர். முதற்கட்டப் பதிவின் போது பதியப்பட்ட யாராவது அவ்வீடுகளில் அப்போது இல்லாவிடின் அவர்களது பெயர்களைப் படிவங்களில் இருந்து நீக்குவர்.

பட்டினங்களிலும் முக்கிய நகரங்களிலும் நடமாடும் கணக்கெடுப்பாளர்கள் வீடுகளில் இருந்து வெளியே நடமாடுவோர் குறித்த விவரங்களைப் பதிவு செய்வர். ஜூலை 17ஆம் திகதி நடைபெறும் இறுதிக் கட்டக் கணக்கெடுப்பிற்காக அன்று பிற்பகல் விடுமுறை வழங்குமாறு அரச மற்றும் தனியார் துறையினருக்குப் பணிப்புரை வழங்குமாறு குடிசன மதிப்பு புள்ளிவிவர திணைக்களம் அமைச்சரவைக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. ஆனால் அரசு இதுவரை அதுபற்றி வர்த்தமானி அறிவிப்பை வெளியிடவில்லை. ☆

# கிணற்றில் எலும்புக்கூடு

கிளிநொச்சி,ஜூன்20

கிளிநொச்சி பரந்தன் பகுதியிலுள்ள கிணறு ஒன்றுக்குள் இருந்து மனித மண்டையோடு ஒன்றும் எலும்புகளும் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு இந்தப் பகுதியிலுள்ள வயற் காணி ஒன்றின் மண் கிணற்றைத் துப்புரவு செய்தபோது கிணற்றுச் சேற்றுக்குள் இருந்து சிதைவுற்ற நிலையில் இந்த எலும்புகள் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வெலும்புகளுடன் மெல்லிய நீல நிற மேற்சட்டை ஒன்றும் ஆண்கள் அணியும் உள்ளாடை ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. (ஐ-ஒ-4)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலியும்
## பிறந்த நாள் நினைவலையும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 30 - 06 - 1931 | 12 - 07 - 1999 |

### அமரர் மூளாய் அருணாசலம்

*(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், நீர்ப்பாசனத் திணைக்களம், சுந்தரகுமார் ரவல்ஸ் சேவிஸ், 14, ஜுபிலி பஸார், யாழ்ப்பாணம், உதயன், சஞ்சீவி, தினகரன், வீரகேசரி எழுத்தாளர்)*

**திதி : 20 - 06 - 2001 சதுர்த்தசி**

இரண்டு ஆண்டுகள் மறைந்தாலும் உங்கள் நினைவு எம்
நெஞ்சங்களிலிருந்தும் மறையவே மறையாது....

**தேவாரம் பாடும் திருவாசகத் தேனும் தித்திக்கும் திருப்புகழும்**
**நாவார உண்டு நல்லவழி சென்றீர்களோ?**
**கனிந்த கந்தரலங்காரம் கருணையுடன் பாடி**
**காலனிடம் சிக்காமல் கந்தனிடம் சென்றீர்களோ?**

*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்*
மனைவி, மகள்மார், மருமகன்மார், பேரக்குழந்தைகள்

*"அருணோதயம்" ஆஸ்பத்திரி வீதி, மூளாய்* (89144)

## ஐந்தாவது பிறந்த நாள் வாழ்த்து

*Happy Birthday*

**20-06-2001**

### செல்வன் சஜீவன்



சண்டிலிப்பாய் கிழக்கைச் சேர்ந்த
**திரு.திருமதி வேல்முருகன் - உதயகுமாரி**
தம்பதிகளின்
செல்வப் புதல்வன்

### செல்வன் சஜீவன்

தனது ஐந்தாவது பிறந்தநாளை
இன்று (20-06-2001) புதன்கிழமை
தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக்
கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா,
அம்மா, அப்பம்மா, அம்மம்மா, மாமாமார்,
அத்தைமார், சித்திமார், சித்தப்பாமார்,
துவாரகா மச்சாள், அண்ணாமார்,
தங்கைமார், அம்மப்பாமார், அம்மம்மாமார்
மற்றும் உற்றார், உறவினர்கள்,
பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

*இராமநாதன் வீதி, திருநெல்வேலி.*

- **வீ.வேல்முருகன்.**
*(தகப்பன்)* (89180)

முருகன் துணை

## 6ஆம் மாத நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 22 - 06 - 1925 | 20 - 12 - 2000 |

### அமரர்
### சுவாமிநாத இராஜேந்திரக் குருக்கள்

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோயில்
பிரதம குருவும், எமது குடும்பத் தலைவருமாகிய
அமரர்
**சுவாமிநாத இராஜேந்திரக் குருக்கள் நினைவாக...**


இராசு ஐயாக் குருக்கள் என்றால் ஈழநாட்டில்
இந்தியத்துக் "காந்தமலை" மயிலாப்பூரில்
பூசனையில் மனம் செலுத்தும் சிரத்தை வாய்ந்த
பூதலத்து மூலையெங்கும் கசிவு தோன்றும்
தேசிகராய் குருமணியாய் ஆகமங்கள்,
திருமுறைகள், புராண கலை தேர்ந்து ஞானம்
வீசும் ஒளிப் பிழம்பாகி நீர்வை நின்ற
மெய்யுணர்வின் விம்மிதத்தை நினைத்து வாழ்வாம்....
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எமது குடும்பத் தலைவரின் பிரிவால்
ஆறாத்துயரில் மூழ்கியிருக்கும்
**திருமதி சா.இராஜேந்திரக் குருக்கள் குடும்பத்தினர்.**

*நீர்வேலி தெற்கு, நீர்வேலி.* (89183)


# குடாநாட்டின் பணப் பயிருக்கு

யாழ்ப்பாணக் கமக்காரர்களின் தனித்துவமான வேளாண் செய்கைக்கு கட்டியங்கூறும் பணப்பயிர்களில் புகையிலை முதன்மையானதாகும். குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் பரவலாக விவசாயிகள் புகையிலைப் பயிர்ச்செய்கையில் ஆர்வம் கொண்டுள்ளமை அண்மைக் காலங்களில் அதிகரித்துக் காணப்படுகின்றது. அந்த அளவிற்குப் பெருமளவு



விலாங்குப் புழுவின் நுணுக்குக் காட்டியூடான தோற்றம்.

இலாபத்தை ஈட்டித்தருகின்ற பயிராகக் கருதப்பட்டு வந்த புகையிலைப் பயிர்ச் செய்கை தகுந்த சந்தை வாய்ப்பு இன்மையால் (தென்பகுதிக்கு ஏற்றுமதி செய்வதிலுள்ள நடைமுறைச் சிக்கலால்) நொந்து போயிருக்கும் இவ்வேளையில், முடக்கிய முதலை ஈடுசெய்யவேனும் முடியாதளவிற்கு புகையிலைப் பயிர் நோய்த்தாக்கத்திற்கும் உள்ளாக்கப்பட்டு மேலும் நலிவடையச் செய்யப்பட்டுள்ளது. அநேகமான புகையிலைச் செய்கையாளர்களின் வீட்டு மதில்களில் தொடராகத் தொங்க விடப்பட்டிருக்கும் புகையிலைச் சிப்பங்களை அவதானித்தால் தவளைக் கண் இலைப்புள்ளி நோயின் தீவிரத் தன்மையை நோக்கலாம். (இவ் விடயம் 25-05-2001 உதயனில் பிரசுரிக்கப்பட்டது) இந்நோய் தவிர புகையிலை இலைச்சுருளல், சித்திர வடிவு நோய், வேர்முடிச்சு விலாங்கு புழுத்



வேர் நுனிகளில் வேர் முடிச்சுகளை அவதானியுங்கள்.

தாக்கம் என்பனவும் முக்கிய பிரச்சினைகளாகப் புகையிலைப் பயிர்ச் செய்கையில் இனங்காணப்பட்டுள்ளன.

அண்மைக்காலங்களில் விலாங்குப்புழுவின் (Nematode) தாக்கம் அநேகமான பயிர்களில் அவதானிக்கப்பட்டுள்ளது. புகையிலை, சின்ன வெங்காயம், தக்காளி, உருளைக் கிழங்கு போன்ற பயிர்களில் இவ்வாறான விலாங்குப் புழுவின் தாக்கம் அதிகரித்தும் காணப்படுகிறது. புகையிலைப் பயிரினத்தைத் தாக்கும் வேர்முடிச்சு விலாங்குப்புழு (Root Knot nematode) பற்றியதாக இக்கட்டுரை தொடர்கின்றது.

நாற்றுக்களைத் தாக்கும் இவ்வகை விலாங்குப்புழுக்கள் அவற்றின் வளர்ச்சியைக் குன்றச் செய்வதுடன் இலைகளை மஞ்சள் நிறமானதாகவும், இலை விளிம்புகள் கருகவும் செய்து விடுகின்றன. இவ்விதமான அறிகுறிகள் காணப்படும் நாற்றுக்களைப் பிடுங்கி அவற்றின் வேர்ப்பகுதியை அவதானித்தால் சிறிய வேர்முடிச்சுக்கள் போன்று (அவரைப் பயிர்களில் - உழுந்து, பயறு போன்றவற்றில் காணப்படும் வேர்முடிச்சுக்கள் போன்று ஆனால் அளவில் சிறியதாக) காணப்படும். புகையிலைப்பயிரில் தழைச்சத்தை நிலைநாட்டும் வேர் முடிச்சுக்கள் இல்லாததனால் மேற்குறிப்பிட்ட சிறியளவிலான வேர் முடிச்சுக்கள் அல்லது சிறிய கணுக்கள் காணப்படுவது விலாங்குப்புழுவின் தாக்கத்தை உறுதி செய்வதாக அமையும்.

நீர்வேலி, கோப்பாய், ஊரெழுப் பகுதிகளில் அண்மையில் தவறிப் பெய்த மழையினால் புகையிலைப் பயிரின் விலை வெகுவாக வீழ்ச்சியடைந்ததை ஜீரணிக்கமுடியாது மனச்சோர்வடைந்த கமக்காரர்கள் பலர். இவர்களுடன் சேர்ந்து வெங்காயச் செய்கையாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். மழை பெய்து முடிய அந்த மழைத் தண்ணீரின் நிலக்கீழ் ஈரம் அதிகரிததுள்ள நிலையில் "மழைத்தண்ணீரை மாற்றிக்கட்டுவது" என்ற நினைப்பில் மேலும் நீர்ப்பாய்ச்சுவதனால் நிலத்தடி ஈரம் தேவைக்கதிகமாக இருப்பதாகிவிடும். இத்தகைய ஓர்நிலையில் பலவித நோய்த் தொற்று ஏற்பட வாய்ப்புக்களும் அதிகம். மேலும் அதிகரித்த ஈரப்பதன் விலாங்குப்புழு, பூஞ்சண வாடல் நோய் போன்றவை இலகுவாகப் பரவலடையவும், பயிரினைத் தாக்கவும் ஏற்புடையதாகிவிடுகின்றன.

மழைத்தண்ணீர் மாற்றிக்கட்டியவுடன் தக்காளி, மிளகாய் போன்ற பயிர்களின் இலைகள் சடுதியாக உதிர்த்து பயிரும் விறைத்த தன்மைக்குள்ளாவது இதன் காரணத்தினாலாகும். இவ்வாறான பயிர்களின் நிலத்துடனான பகுதியை அவதானித்தால் வெளித்தோல் நொய்து போய் பின்னர் அழுகி உரிந்து வெள்ளை நிறமான பூஞ்சணம் உருவாவதை அவதானிக்கலாம். பயிர்களுக்கு மண் அணைத்த பகுதிகளில் இலகுவாக இப்பூஞ்சணம் உருவாதலைக் காணலாம. இவ்வகை வாடல்பூஞ்சணத்தை கட்டுப்படுத்த 'கப்ரான்' எனப்படும் பூஞ்சண நாசினியைக் கரைத்து பயிரின் அடிப்பாகத்திற்கு ஊற்றுவதன் மூலம் இப்பிரச்சினையைச் சீர் செய்ய முடியும்.

தகவல்:
**குணசிங்கம் மிகுந்தன்**
*தலைவர்,*
*விவசாய உயிரியல் துறை,*
*விவசாய பீடம்.*

# விலாங்குப் புழுவினால் அச்சுறுத்தல்!

வலாங்குப் புழுக்களை சாதாரண கண்களால் அவதானிக்க முடியாது. இதற்கு நுணுக்குக் காட்டியின் உதவி தேவை. (உயிரியல் துறையில் பாதிக்கப்பட்ட பயிரின் வேர்ப்பகுதியுடனான பாகத்தை எடுத்து வந்து விலாங்குப் புழுவின் தாக்கத்தை அல்லது அதன் தன்மையை கண்டறிந்து கொள்ளலாம்)


இப்புழுக்களினால் தாக்கத்திற்குள்ளான முதிர்ச்சியடைந்த பயிர்களும் வளர்சசி குன்றியனவாகவும், இலைகள் தடிப்பானவையாகவும், மெல்லிய மஞ்சள் நிறமானதாகவும் காணப்படும். இவ்வகை அறிகுறிகளுடைய முதிர்ந்த பயிர்களின் வேர்களில் சிறிய கணுக்களை (வேர்முடிச்சுக்கள்) காணலாம். கணுக்களின் அளவு மிகச்சிறியதாகவோ அன்றி வேர்களின் அளவை விட தடிப்பானதாகவோ தோற்றமளிக்கும். ஆரம்பத்தில் இவ்வாறான அறிகுறிகளைக் காட்டும் பயிர்கள் எண்ணிக்கையில் குறைவானதாகவும் ஆங்காங்கே திடடம் திட்டமாகவும் காணப்படும். தொடர்ந்துவரும் காலங்களில் புகையிலை அல்லது வெங்காயம் போன்ற பயிர்கள் தொடர்ந்து பயிர் செய்யப்படும் போது இத்தாக்கம் அதிகரித்திருப்பதனை அவதானிக்கலாம்.

**கமமும் புலமும்**

**தயாரிப்பு: ஜெயஸ்ரீ**

புகையிலையில் தாக்கத்தை ஏற்படுத்தும் இவ்விலாங்குப் புழுக்கள் 'மெலொய் கோனகனி' (Meloigogyne) வகைக்குரியவை இவற்றின் முட்டைகள் வெற்றுக்கண்ணுக்குத் தென்படாத நீள்கோளவடிவினதானவை. முட்டைகள் இறந்த வேர் முடிச்சுக்களிலும் சுயாதீனமாக மண்ணிலும் காணப்படும். ஏனைய அங்கிகளைப் போலன்றி விலாங்குப் புழுக்களின் முட்டைகள் உறங்குநிலையில் (Dormant) இருந்து தொற்று ஏற்படுத்தும் தன்மை கொண்டவை. இந்நிலையின் மூலமாக விலாங்குப்புழுக்கள் இலகுவில் தப்பிப்பிழைக்கும் தன்மையை ஏற்படுத்திக் கொள்கின்றமை இப்பீடையைக் கட்டுப்படுத்துவதில் சிக்கலை ஏற்படுத்துகின்றது.

மண்ணின் வெப்பநிலை, ஈரப்பதன் போன்றன சாதகமாக உள்ளபோது உறங்குநிலையில் இருக்கும் முட்டைகளில் (முதலாம் இளநிலைகள் உருவாகும். முதலாம் இளநிலை தோல் கழற்றல் மூலமாக இரண்டாம் இளநிலையை அடையும். இரண்டாம் இளநிலையானது பயிர்களில் தொற்று ஏற்படுத்தும் பருவமாகும். அதாவது இப்பருவம் தானாக அசைந்து சென்று புகையிலை வேரினையடைந்து தொற்றுதலை ஏற்படுத்தக்கூடியது. இதற்கு மண்ணிடையான நீர், நீர்ப்பாய்ச்சுதல் என்பன உதவும். இவ்விளநிலைப் பருவம் உறுதியான குத்தியுறுஞ்சுவாயுறுப்பை கொண்டிருக்கும். இவ்வாயுறுப்புக்களின் உதவியுடன விலாங்குப் புழுக்கள் புகையிலையின் வேர்களினது இழையங்களுக்குள் புகுந்து இழையங்களிலிருந்து போசனைச் சத்துககளை அகத்துறிஞ்சும். இதன்போது இவற்றினால் வெளிவிடப்படும் சில நச்சுச் சுரப்பிகள் புகையிலையின் இழையங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும். முதிர்ச்சியடைந்த பெண் விலாங்குப் புழுககள் 400-500 முட்டைகளை இடும் வல்லமையுடையன. மேலும் இப் புழுக்களின் வாழ்க்கை வட்டம் 21-25 நாள்களில் பூர்த்தி செய்யும் தன்மை உடையது. புகையிலைப் பயிர்செயயும் காலப்பகுதியிலோ அல்லது எதிர்பாராத காலநிலை மாற்றத்தினாலோ ஏற்படுத்தப்படும் உகந்த மண்ணின் வெப்பநிலை மற்றும் மண்ணின் ஈரப்பதன் என்பன முட்டைகள் பொரிப்பதற்கும், புழுக்கள் விருத்தியடைவதற்கும் சாதகமான நிலையை வழங்குகின்றன. முட்டைகள் பொரிப்பதற்கான உகந்த நிலை இல்லாதவிடத்து அவை தொடர்ந்து உறங்கு நிலையிலேயே இருந்து மீண்டும் அநுகூலமான சூழல் நிலைமை தோன்றுமிடத்து முட்டைகள் பொரித்து புகையிலையின் வேர்களைத் தாக்குகின்றன.




விலாங்குப்புழுக்களின் தொற்றுக்கள் ஆரம்பிக்கும் இடமாக நாற்று மேடை இருக்கின்றது. எனவே நாற்று மேடையைத் தாயார்ப்படுத்தி விதைகளை விதைத்த பின்பு நாற்று மேடைக்கு கார்போபியூரான் அல்லது பியூரடான் என்னும் பூச்சி நாசினியைப் பயன்படுத்துதல் சிறந்தது கார்போபியூரான் என்னும் குருணல் வடிவில் கிடைக்கும் பூச்சி நாசினி ஓர் ஊடு புகுந்து தாக்கும் வல்லமையை கொண்ட விலாங்குப் புழு நாசினியுமாகும்.

### நாற்றுமேடை முகாமைத்துவம்

நாற்று மேடையில் விலாங்குப் புழுவின் தாக்கத்திற்கு உள்ளான வளர்ச்சி குன்றிய, மஞ்சள் நிறமான, வாடிய வேர்களில் முடிச்சுக்களைக் கொண்ட நாற்றுக்களை நடுகைக்காகத் தெரிவுசெய்யக் கூடாது. இப்புழுக்களை மண்ணினது வெப்பநிலையை அதிகரிப்பதன் மூலம் இறகச்செய்யலாம். இதற்காக நாற்று மேடை தயாரிக்கும் போது நாற்று மேடையின் மேற்பரப்பில் வைக்கோல அல்லது உக்கிய கிடுகு, தென்னோலை, பனைஓலை போன்றவற்றைப் பரப்பி எரித்தல் சிறந்தது. பின்னர் மிதமான சாம்பலை அகற்றிவிட்டு மிகுதியை மண்ணுடன் கலந்து விட வேண்டும். நாற்றுமேடை தயாரித்த பின்பு மண்ணை ஈரமாக்கி பொலித்தீனால் 2-3 நாள்களுக்கு மூடிவிட வேண்டும். மண்ணில் விலாங்குப் புழுக்களின் முட்டைகள் நீண்ட காலமாக உறங்கு நிலையில் இருக்கக்கூடிய தன்மை வாய்ந்ததாகையினால் நாற்று மேடைக்கு தொடர்ச்சியாக ஒரே இடத்தைத் தெரிவு செய்வதனைத் தவிர்க்க வேண்டும்.

### வயல் நிலத்தில் முகாமைத்துவம்

பயிர் செய்யும் நிலப்பரப்பை கோடை காலங்களில் ஆழமாக உழுதுவிட வேண்டும். இதன் மூலம் மண்ணில் உள்ள முட்டைகள், இளம் பருவ நிலைகள் மற்றும் பூச்சி பீடைகளின் கூட்டுப்புழுக்கள், குடம்பிகள் என்பன மண்ணின் மேற்பரப்பிற்குக் கொண்டுவரப்பட்டு சூரிய வெப்பத்தினால் அழிக்கப்பட்டுவிடும்.

### சுழற்சிப் பயிர்ச்செய்கை சிறந்தது


புகையிலையை ஒரே இடத்தில் தொடர்ச்சியாகப் பயிரிடுவதனைத் தவிர்க்கவேண்டும். புகையிலையைத் தொடர்ச்சியாகப் பயிரிடும்போது விலாங்குப்புழுக்களுக்கான உணவு தொடர்ச்சியாகக் கிடைக்க ஏதுவாகிவிடும். இதனால் அவற்றினது எண்ணிக்கை நீங்கள் பயிரிடும் வயற்பரப்பில் அதிகரித்துக் காணப்படும்.

இதனால் நீங்கள் என்னதான் பயிர்ப் பீடைக் கட்டுப்பாட்டு முறைகளைக் பின்பற்றினாலும், பீடை நாசினிகளைப் பயன்படுத்தினாலும் விலாங்குப்புழுவின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாதிருக்கும் எனவேதான் புகையிலைப் பயிரினை ஆகக் குறைந்தது 3 வருடங்களுக்கு ஒரு முறை பயிரிடுதல் சிறந்தது.

இடைப்பட்ட காலங்களில் வேறு பயிர்களைப் பயிரிடுவது நல்லது. பயிர்ச்சுழற்சி முறையின் மூலமாக உங்களது வருமானமும் அதிகரிப்பதுடன் பீடைப் பிரச்சினையையும் வெகுவாகக் குறைத்துக் கொள்ளலாம் அல்லவா!

### களை கட்டுப்பாடு அவசியம

புகையிலை பயிர்செய்யும் காலங்களில் எந்தவிதமான களைகளும் வயலில் இல்லாதவாறு கவனித்துக் கொள்ளல் சிறந்தது. அநேகமான களைகள் இவ்வகை விலாங்குப் புழுக்களுக்குச் சிறந்த உணவு வழங்கிகளாக இருப்பதுவே இதற்குக் காரணமாகும். அறுவடையின் பின் வயல் நிலத்தில் விடப்படும் புகையிலையின் அடிக்கட்டைப் பகுதியில் உள்ள வேர் முடிச்சுக்களிலும் வேர்களிலும் விலாங்குப்புழுக்கள் அதிகளவில் காணப்படுவதனால் அறுவடை செய்த பின்னர் எஞ்சிய புகையிலைத் தண்டினை வேருடன் பிடுங்கி எரிக்க வேண்டும். விலாங்குப் புழுக்களின் பாதிப்புக்கள் மண்ணில் காணப்படும் போது கார்போபியூரான் என்னும் குருணல் பூச்சி-விலங்குப் புழு நாசினியை ஓர் அங்குல தண்ணீர் படலம் இருக்கும் போது விசிறவும். விலாங்குப்புழுவினைக் கட்டுப்படுத்த அனைத்து முறைகளையும் இயன்றளவில் கடைப்பிடித்தல் அவசியமானதாகும். விலாங்குப்புழுவின் தாக்கத்தினால் இனியும் உங்களது புகையிலைப் பயிர் பாதிப்புறா வண்ணம் மேலே குறிப்பிட்ட முறைகளை முயற்சி செய்து கடைப்பிடியுங்கள். சிறந்த பலனை பெறுங்கள். பீடைகளைச் சிறப்பாகக் கட்டுப்படுத்திவிட்டீர்களாயின் மற்றவாகளுக்குச் சொல்லுங்கள் கட்டுப்படுத்த முடியவில்லையாயின் எங்களுக்குச் சொல்லுங்கள்.



**விவசாயத்துக்கு பிரதானமானது நீர்ப்பாசனம். குடாநாட்டில் உள்ள - மேட்டுநிலப் பயிர்ச் செய்கைக்கு பயன்தரக் கூடிய - பல குளங்கள் கவனிப்பாரற்று சீரழிந்து கிடக்கின்றன. இவற்றைப் புனரமைப்புச் செய்து மழைநீரைத் தேக்கி வைப்பதன் மூலம் விவசாயச் செய்கையை மேம்படுத்தி பெரும் பயனடைய முடியும்.**

**சங்கரத்தை திக்கிராய்க் குளத்தின் வாய்க்கால் அண்மையில் சிரமதானம் மூலம் திருத்தி அமைக்கப்பட்டது. காங்கேசன்துறை மாவட்ட சாரணர் தலைவர் நா.அகிலன் தலைமையில் வட்டு.மத்திய கல்லூரி சாரணர்கள் இந்த சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். சாரணர்கள் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்தபோது எடுக்கப்பட்ட படம் இது.** (ம-175)

## வாழ்த்தி வணங்குகின்றோம்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான பரம்பரைக் குருமணியும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் சமேத ஸ்ரீ வீரபத்திரர் சுவாமி தேவஸ்தான பிரதம குருவுமாகிய சிவஸ்ரீ ச.மகேஸ்வரக்குருக்கள் அவர்கள் சர்வதேச இந்து மத குருபீடாதிபதியாகத் தெரிவாகியதையிட்டு அவரை மனதார வாழ்த்தி வணங்குகின்றோம்.

அன்னதான சபையினர்,
ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் சமேத
வீரபத்திரசுவாமி தேவஸ்தானம்,
நயினாதீவு.

(89205)

வேகமான
விற்பனை
இன்றே வாங்குங்கள்

கணிப்பொறி
computer 2000
கலையார்வன்
தமிழில் ஒரு செயல்முறை விளக்கத் தொகுப்பு

இலகு தமிழில் 7 அங்கத் தொகுதிகள், 400 விளக்கப் படங்கள், 560 பக்கங்கள் - காலத்தோடு முன்னேறிச் செல்ல குடும்பத்தவர் அனைவரும் கற்க வேண்டிய நூல். பிரதி: 500/=

*கிடைக்கும் இடங்கள்:*

பூபாலசிங்கம் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்.
மக்மிலன் புத்தகசாலை, 3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்.
வசந்தம் புத்தகசாலை, 405, ஸ்ரான்லி வீதி, யாழ்.
துர்க்கா ஸ்ரேஷனர்ஸ், பஸ் நிலையம், சுன்னாகம்
மொடேன் ஸ்ரோர்ஸ, 11, நெல்லியடி.
கணனி பூங்கா, ஸ்ரான்லி வீதி, யாழ்.
DCS, 124/2, பலாலி வீதி, யாழ்./ நெல்லியடி.
IIS, 100, மணிக்கூட்டு வீதி, யாழ்./சங்கானை.
ஜெயந்த் சென்ரர், 246, பிரதான வீதி, யாழ்.
நிஷான், 21, மாட்டின் வீதி, யாழ்.

வெளியீடு: V.J.கொன்ஸ்ரன்ரைன் / இயக்குநர்
NEO CULTURAL COUNCIL
28/1, சென் ஜேம்ஸ் மேற்கு வீதி, யாழ். T.P.3224.

(C/17151)

## தென்மராட்சி மாணவருக்கு ஓவியப் போட்டி

தென்மராட்சி,ஜூன்20

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினர், தென்மராட்சி கல்வி வலய பாடசாலை மாணவர்கள் மத்தியில் சுகாதார வார ஓவியப் போட்டியை நடத்தவுள்ளனர்.

போட்டிகளை இரு பிரிவுகளாக நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தரம் 6 தொடக்கம் 8 வரையிலான மாணவர்களுக்கு "வீட்டு விபத்துக்களைத் தவிர்ப்போம்" என்னும் தலைப்பிலும், தரம் 9 தொடக்கம் ஆண்டு 13 வரையிலான மாணவர்களுக்கு 'நுளம்பினால் பரவும் நோயைத தடுத்தல்' என்னும் தலைப்பிலும் போட்டி நடத்தப்படும்.

ஓவியப் போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் எதிர் வரும் 27ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலை அதிபர் ஊடாகத் தமது ஆக்கங்களை வலயக் கல்வி அலுவலகத்தில சமர்ப்பிக்குமாறு வலயக் கல்விப் பணிமனையினர் அறிவித்துள்ளனர்.

(க-117)

## படித்த மகளிருக்கு தையல் பயிற்சி

வடமராட்சி,ஜூன்20

கிராமிய சுயதொழில் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கற்கோவளம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் படித்த யுவதிகளுக்கான தையல் பயிற்சி நிலையம் ஒன்றை கடந்த திங்கட்கிழமை முதல் ஆரம்பித்துள்ளது.

இத்தையல் பயிற்சி நிலையத்தில் 40 கிராமிய யுவதிகள் பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். பயிற்சி முடிவில் இவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

பருத்தித்துறை பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி நவமணி ஜெயராஜா பயிற்சியை ஆரம்பித்து வைத்தார்.

(ம-173)



அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற பாட மேம்பாட்டுக் கணிப்பீட்டு உபகரணக் கண்காட்சியை கோப்பாய்க் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாள் இ.சிவஞானசுந்தரம், அச்சுவேலிப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரி.எம்.எஸ்.எம்.தென்னக்கோன் ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தபோது எடுக்கப்பட்ட படம். உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.ஸ்ரீதயாளன், கல்லூரி அதிபர் அருட்சகோதரி மரிய றோசாறியோ ஆகியோரும் காணப்படுகின்றனர். *(படம்: அச்சுவேலிச் செய்தியாளர்)*

## கால்நடை வைத்தியர் அலுவலகத்தின் நடமாடும் சேவை

அச்சுவேலி,ஜூன்20

கோப்பாய் கால்நடை வைத்தியர் அலுவலகத்தின் நடமாடும் சேவைகள் இன்று புதன்கிழமை இடைக்காடு கலைமகள் சனசமூக நிலையத்தில் நடைபெறும் எனக் கோப்பாய் கால் நடை வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

மாதம் தோறும் குறிப்பிட்ட தினங்களில் நடமாடும் சேவைகளை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (க-11)

## தேசிய ஆங்கில டிப்ளோமாப் பரீட்சை

யாழ்உயர் தொழில் நுட்ப நிறுவன தேசிய ஆங்கில டிப்ளோமா 2ஆம் வருட இறுதிப் பரீட்சைகள் எதிர்வரும் 23ஆம் திகதி காலை 9.30 மணிக்கு ஆரம்பமாக உள்ளன.

மேற்படி பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தமக்குரிய பரீட்சை அனுமதி அட்டைகள் மற்றும் நேர சூசி என்பவற்றை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவன இயக்குநர் ரி.இராஜரட்ணம் தெரிவித்துள்ளார்.

(ம-6)

*யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் – வரையறுள்ளது*

## கூட்டுறவு உணவக முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

எமது சங்கத்தின் உணவகத்தை நடத்துவதற்கு இத்துறையில் போதிய அனுபவம் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நியமனம் ஒப்பந்த அடிப்படையிலான தாகும்.

*வயதெல்லை* :- *30 - 50 வயதுக்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.*

*சம்பளம்* :- *பேசித் தீர்த்துக்கொள்ளப்படும்.*

விண்ணப்பிக்க வேண்டிய முடிவு திகதி : 06-07-2001
பிற்பகல் 3.00 மணிக்கு முன்.

விண்ணப்பங்கள் யாவும்
*"பொது முகாமையாளர், யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கம்,
127, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்"*
என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

- பொது முகாமையாளர்.

(C/17153)

## இதய அஞ்சலி



## திருமதி நாகேஸ்வரி ஜெயராஜா

அவர்கள் 17.06.2001 அன்று கொழும்பில் இறைவனடி சேர்ந்த செய்தி அறிந்து ஆழ்ந்த அதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம்.

அவரின் மறைவால் துயருற்றிருக்கும் கணவர் ந.ஜெயராஜா மற்றும் பிள்ளைகளான: ஜனார்த்தனன், யதுநந்தனன், ஜெயநந்தனன் ஆகியோரின் துயரில் நாமும் இணைந்துகொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அத்தியடிப் பிள்ளையாரை வேண்டுகின்றோம்.

**யாழ்/அத்தியடி ஸ்ரீ சிதம்பரநடராஜ வீரகத்திப் பிள்ளையார்
கோயில் நிர்வாகத்தினர், ஆலய பிரதமகுருவும் குடும்பத்தினரும்,
அத்தியடி இந்து இளைஞர்கள்,
அத்தியடி வாழ் மக்கள், நண்பர்கள்.**

(89201)

## வாழ்த்தி வணங்குகின்றோம்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் கோயில் ஆதீன குருமணி **சிவஸ்ரீ ச.மகேஸ்வரக்குருக்கள்** அவர்கள் சர்வதேச இந்துமத குருபீடாதிபதியாக ஏகமனதாகத் தெரிவாகியதையிட்டு அவரை மனதார வாழ்த்தி வணங்குகின்றோம்.

ஐ.சண்முகம்
4ஆம் திருவிழா உபயகாரர் சார்பாக,
நயினாதீவு-1.

(89204)

## மீசாலை கைத்தொழில் வணிகர் மன்றம் விசேட பொதுக் கூட்டம்

மேற்படி மன்றத்தின் விசேட பொதுக்கூட்டம் நாளை மறுதினம் (22.06.2001) வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கரவெட்டி கிழவிதோட்டப் பிள்ளையார் ஆலயமுன்றிலில் நடைபெறும்.

விண்ணப்பப்படிவம்பெற்ற மன்ற அங்கத்தவர்கள் அனைவரும் பொலீஸ் முறைப்பாட்டுச் சான்றிதழ், குடும்பப் பதிவு அட்டை, வியாபார பதிவுச் சான்றிதழ் ஆகியவற்றின் மூலப்பிரதிகளுடன், இவற்றின் புகைப்படப் பிரதிகள் தலா மூன்றும் வரும்போது கொண்டுவருமாறு வேண்டப்படுகிறீர்கள்.

- செயலாளர்.

(C/17152)

தாக்குதல் நடக்கலாம் என்ற பீதியால்

# பொலன்னறுவை எல்லைப்புற மக்கள் வெளியேறி வருகின்றனர்

கொழும்பு, ஜூன் 20

பொலன்னறுவை மாவட்ட எல்லைக் கிராமங்களில் தாக்குதல் ஏதும் இடம்பெறலாம் என்ற அச்சத்தில் அப்பகுதிகளிலிருந்து மக்கள் வெளியேறி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் நிதன்வெல பகுதியிலிருந்து சுமார் 100 குடும்பங்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறி அருகிலுள்ள அரனங்கன்வில பகுதியில் தஞ்சமடைந்துள்ளன என்றும்—

கடந்த சில வாரங்களாக இப்பகுதியில் படையினருக்கு எதிரான தாக்குதல்களைப் புலிகள் அதிகரித்திருப்பதை அடுத்தே மக்கள் இடம்பெயர்ந்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த மாதத்தில் இப்பகுதிகளில் இடம்பெற்ற மூன்று தாக்குதல்களில் நான்கு படையினரும், நான்கு பொது மக்களும் கொல்லப்பட்டதாக ஊர் மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதல்களின் போது சொத்துக்களும், கட்டடங்களும சேதமடைந்துள்ளதாகவும் அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

பொலன்னறுவை மாவட்ட எல்லைக் கிராமப் பகுதிகளில் முன்னரும் இவ்வாறான பல தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன என்றும் அவர்கள் குறிப்பிடுகின்றனர். (க–7)

# ஏறாவூரில் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்த முயற்சி

## படையினர் கும்பலை விரட்டியடித்தனர்

மட்டக்களப்பு, ஜூன் 20

ஏறாவூரில் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்த முற்பட்ட கும்பலை இராணுவத்தினரும், பொலீஸாரும் விரட்டியடித்த சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

ஏறாவூர்ப் பகுதியைச் சேர்ந்த முஸ்லிம் கான்ஸ்டபிள் இருவர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவங்களைத் தொடர்ந்து தமிழர் — முஸ்லிம்கள் இடையே கடந்த சில தினங்களாக முறுகல் நிலை இருந்து வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

திங்கட்கிழமை இடம்பெற்ற சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது:–

ஏறாவூர் முஸ்லிம் பிரதேசத்தில் பொதுச் சந்தையில் பொருள்கள் வாங்கச் சென்ற தமிழர்கள் மீதும், இப்பகுதியில் தொழிலில் ஈடுபடச் சென்றவர்கள் மீதும் ஊர்காவல் படையினரும், அப்பகுதிஇளைஞர் கும்பல் ஒன்றும் தாக்குதல் நடத்தியதை அடுத்து செங்கலடி பொதுச் சந்தையில் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த முஸ்லிம் வியாபாரிகள் மீது குழுவொன்று தாக்குதல் நடத்தியுள்ளது.

இச்சம்பவத்தினால் ஆத்திரமடைந்த முஸ்லிம் கும்பல் ஒன்று பொல்லுகள் மற்றும் இரும்புக் கம்பிகள் சகிதம் இப்பகுதியில் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்கள் மீதும், தமிழர்கள் மீதும் தாக்குதல் நடத்தத் திட்டமிருப்பதாக சில முஸ்லிம் பிரமுகர்கள் பொலீஸாருக்குத் தகவல் கொடுத்தனர் அதை அடுத்து அவர்கள் விரட்டியடிக்கப்பட்டதுடன், இப்பகுதிக்கு மோட்டார் சைக்கிள் இராணுவப் படையணியும் வரவழைக்கப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டின் ஓழ்க் கொண்டுவரப்பட்டது. (க)

## சேவைக்காலச் செயலமர்வு

தென்மராட்சி, ஜூன் 20

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 7 தொடக்கம் 11 வரையிலான வகுப்புகளுக்கு விஞ்ஞான பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செய்முறை வேலைகள் தொடர்பான சேவைக்கால செயலமர்வு எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9–00 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இடம்பெறும் என வலயக் கல்விப்பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (ம 117)

## ஹென்றியரசர் கல்லூரி முதலிடம்

இளவாலை, ஜூன் 20

தமிழ்த்தினப் போட்டியில் சிந்து நடைக்கூத்தில் வலிகாமம் வலயத்தில் முதலிடம் பெற்ற இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மாவட்ட மட்டப் போட்டியிலும் முதலிடம் பெற்று மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.

யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர்மட மகா வித்தியாலயம் தென் மோடிக்கூத்தில் மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.

மேலும் ஆங்கிலக் குழுப் பாடல் நிகழ்வில் கீழ்ப்பிரிவிலும், மேற்பிரிவிலும் புனித ஹென்றியரசர் கல்லூரி முதலிடத்தைப் பெற்றுள்ளது. (க.48)

## 'றான்' இணைப்பாளர் நியமனம்

யாழ்ப்பாணம், ஜூன் 20

உள்ளூராட்சித் திணைக்களத்தில் பணிபுரிந்த ப.பரஞ்சோதி கடந்த 13 ஆம் திகதி தொடக்கம் 'றான்' இணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனத்தை வட மாகாண புனரமைப்பு, புனர்வாழ்வு அதிகார சபைத் தலைவர் என். வாமதேவா வழங்கியுள்ளார். (க–6)

# திருமலை செல்லும்மாணவருக்கு பயண அனுமதி வழங்க ஏற்பாடு

## பொறுப்பாசிரியர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூன்20

திருகோணமலையில் நடைபெறவுள்ள மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியின் மெய்வன்மைப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள மாணவர்களுக்கான பயண அனுமதி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை 'றான்' அலுவலகத்தில் வழங்கப்படவுள்ளது.

மாணவர்களுடன் திருமலை செல்லவுள்ள பொறுப்பாசிரியர்கள் அனைவரையும் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு 'றான்' அலுவலகத்துக்கு வருகை தந்து பயண அனுமதியைப் பெற்றுச் செல்லுமாறு யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டுக்குழு அறிவித்துள்ளது.

கடந்த 19 ஆம்திகதிதொடக்கம் எதிர்வரும் 30ஆம் திகதி வரையும் நடைபெறவிருந்த மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்குச் செல்லவிருந்த மாணவர்கள் காலநிலை சீரின்மையால் கப்பல் போக்கு வரத்துத் தடைப்பட்டதால் குறிப்பிட்ட திகதிக்குச் செல்ல முடியவில்லை.

இதனை அடுத்து மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகளுக்கான திகதிகள் பிற்போடப்பட்டன. தற்பொழுது மெய்வன்மைப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள மாணவர்கள் எதிர்வரும் 28 ஆம் திகதி வியாழக்கிழமை கப்பலில் திருமலை புறப்பட ஆயத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன. (க–10)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தின் மூன்றாம் வருட மாணவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று நண்பகல் 12 மணிக்கு பல்கலைக்கழகத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

## கப்பல் கட்டணம் இன்று மட்டுமே மீளளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 20

கடந்த 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பல் மூலம் திருகோணமலைக்குச் செல்வதற்காகப் புறப்பட்டு அன்று பயணம் செய்யாது திரும்பிய பயணிகளில்—

நேற்றைய கப்பலிலும் செல்லாதவர்களுக்கான 'ரிக்கெற்' கட்டணங்கள் மீளளிக்கப்பட்டு வருகின்றன.

அக்கட்டணத்தை இதுவரையும் பெற்றுக்கொள்ளாதவர்கள் இன்று புதன்கிழமை பெற்றுக்கொள்ளுமாறு 'றான்' அலுவலகம் அறிவித்துள்ளது.

இன்றும் கட்டணத்தைப் பெற்றுக்கொள்ளாவிடில் இனி ரிக்கெற்றுக்கான கட்டணம் மீளளிக்கப்படமாட்டது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க–10)

## யாழ். பல்கலையில் திருவுருவப் பட திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 20

தமிழ்த் தூது தனிநாயகம் அடிகள், நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் ஆகியோரின் திருவுருவப்படத் திறப்பு விழா இன்று காலை யாழ். பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத்துறையின் விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பல்கலைக்கழக கிறிஸ்தவ —இஸ்லாமிய நாகரிகத்துறையின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள இந்த விழாவில் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம், தென்னிந்தியத் திருச்சபையின் யாழ். பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன், பதில் துணை வேந்தர் பேராசிரியர் எஸ். பாலச்சந்திரன் ஆகியோர் கலந்துகொள்வர்.

சுவாமி ஞானப்பிரகாசர் பற்றி பேராசிரியர் எஸ். கே. சிற்றம்பலமும், தமிழ்த் தூது தனிநாயகம் அடிகள் பற்றி கலாநிதி எஸ். சிவலிங்கராஜாவும் சிறப்புரை ஆற்றுவர். (க-7)

# தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் வியத்தகு பணிகளைப் பாராட்ட வேண்டும்

## 35 ஆவது ஆண்டு விழாவில் பேராசிரியர் கோபாலகிருஷ்ணஐயர்

வலி. வடக்கு, ஜூன் 20

இந்துசமயம் பல்வேறு பிரச்சினைகள், விமர்சனங்களுக்கும் முகம்கொடுக்க வேண்டிய ஒரு சமயமாக உள்ளது. தற்போது இந்து சமயத்திற்கு வேண்டியது மதத்தின் உண்மையான தத்துவங்கள், விழுமியங்கள், கொள்கைகளை மக்களுக்கு எடுத்துக் கூறத்தக்க பிரசாரகர்களே. அத்தகைய ஒருபணியை தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் மேற்கொண்டு வருவதையிட்டுப் பாராட்ட வேண்டும்.

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் கோபாலகிருஷ்ண ஐயர் குறிப்பிட்டார்.

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் 35 ஆவது ஆண்டு விழாவும் சைவசமயப் பண்பாட்டுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் பெரியோர்களைக் கௌரவித்தலும் சங்கத் தலைவர் நா. சிவநாதன் தலைமையில் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய பேராசிரியர் கோபாலகிருஷ்ண ஐயர் தொடர்ந்து உரையாற்றும் போது —

இந்து ஆலயங்களின் குருமார்கள் ஆலயப் பணியுடன் மட்டும் நின்றுவிடக்கூடாது. ஆலயத்திற்கு வரும் பக்தர்களிடமும் ஏனையவர்களிடமும் இருந்து சமயத்தின் விழுமியங்களை எடுத்துக்கூறி மதத்தைப் பாதுகாக்க வேண்டும்.

அன்பு, தொண்டு, இறை பக்தி, பெரியாரைக் கௌரவித்தல், மனித நேயம் என்பன இன்று இளைஞர்களிடையே மறைந்து கொண்டே செல்கின்றன. இவற்றைச் சரியான முறையில் இளைய தலைமுறையினர் இடையே வேரூன்றச் செய்ய வேண்டும்.

இப்பணிகளைத் தற்போது துர்க்காபுரம் இந்து இளைஞர்கள் முன்மாதிரியாக இருந்து முன்னெடுத்துச் செல்வதைப் பார்க்கும்போது சிறந்த வழிகாட்டிகளாகவும், பண்பாளர்களாகவும் ஆலயத்தினால் வளர்க்கப்பட்டுள்ளார்கள் என்பதை உணரக் கூடியதாக இருக்கின்றது.

### ஏனைய இளைஞரும் பின்பற்ற வேண்டும்

பாடுதல், பரவுதல், தொண்டு செய்தல் ஆகிய துறைகளில் துர்க்காபுரம் தேவஸ்தானமும் இளைஞர்களும் நீண்டகாலமாக சேவையாற்றி வருகின்றார்கள். இத்தகைய ஒரு செயற்பாட்டை ஏனைய இளைஞர்கள் முன்மாதிரியாகப் பின்பற்ற வேண்டும்.

யுத்த சூழலில் இச்சங்கமும் தேவஸ்தானமும் பல்வேறு நெருக்கடிகளுக்கும் மற்றும் தளர்வுகளுக்கும் உள்ளாகிய போதிலும் இவற்றிற்கெல்லாம் முகம்கொடுத்து இன்று 35 ஆவது வருடத்தில் இந்து இளைஞர் சங்கத்தினர் நிமிர்ந்து நின்று பல்வேறு சேவைகளையும் இந்து சமயத்திற்கும் மக்களுக்கும் ஆற்றி வருகின்றார்கள்.

எம்மத்தியில் இன்று இந்து சமயத்தை முன்னெடுத்துச் செல்லக் கூடிய அமைப்புகள், சங்கங்கள் இல்லையென்றே கூற வேண்டியுள்ளது. ஆனாலும் தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் இதற்கு மாறாக சமயத்தை முன்னெடுத்துச் செல்லும் முன்முயற்சி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

### முன்னோடியான நிகழ்ச்சி

முன்னைய காலங்களில் முதுமையானவர்களே இளைஞர்களைப் பாராட்டுவார்கள். ஆனால் இன்று நடைபெறும் நிகழ்வில் இளைஞர்கள் முதியோர்களைப்பாராட்டும் நிகழ்வு இடம்பெறுகின்றது. இது இளைஞர்களின் பெரியோர்களை கௌரவித்தல் பண்புக்கு முன்னோடியாகும் எனவும் குறிப்பிட்டார்.

ஆசியுரை வழங்கிய சங்கப் போஷகரும், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவருமான கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டிதனது உரையில் கூறியதாவது:–

இந்து மதப் பெரியார்களைக் கௌரவிக்கும் நிகழ்வு தெல்லிப்பழை இந்து இளைஞர்களினாலேயே முதற் தடவையாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இல்லாது வேறு யாராவது செய்து இருந்தால் அது பாராட்டப்பட வேண்டியவர்களை, பாராட்டாது பாராட்டப்படத் தேவை இல்லாதவர்களைபாராட்டிய ஒரு செயலாகவே இருக்கும்.

தெல்லிப்பழை இந்துஇளைஞர் சங்கத்தால் அங்கத்தவர்களாக இருந்து தொண்டாற்றிய பலர் இன்று இலங்கையிலும், உலகின் பலபகுதிகளிலும் பல்வேறு சிறப்புகளுடனும் வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள்.

### அமைதி, பக்திகொண்ட இளைஞர் சங்கம்

வேறு சங்கங்களை எடுத்துக் கொண்டோமாக இருந்தால் கூச்சல்கள், குழப்பங்கள் நிறைந்தவையாகவே அவை காணப்படுகின்றன. தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தைப் பொறுத்தவரையில் அமைதியும், பக்தியும் கொண்ட சங்கமாக இருந்து ஆலயத்திற்கு பெரும் பணி ஆற்றுவதுடன் இந்து சமயத்திற்கும் தொண்டாற்றி வருகின்றார்கள் எனவும் குறிப்பிட்டார்.

சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்ட ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாக சபை உறுப்பினரும், ஆசிரியருமான ஆறு. திருமுருகன், கீரிமலை நகுலேஸ்வரக் குருக்கள் ஆகியோரும் உரையாற்றினர். (க-86)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

திடற்புலம், புன்னாலைக்கட்டுவன் வடக்கு என்னும் முகவரியைச் சேர்ந்த செல்லையா திருவருட்செல்வன் என்பவரது விசேட அ.அட்டை (இல. 0906024719),தேசிய அ.அட்டை (இல. 602973280V) என்பன 10.6.2001 அன்று நல்லூருக்கும் தலையாழி வைரவர் கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 88, புது வீதி, ஆறுகால்மடம் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (89197)

மதவடி ஒழுங்கை, கட்டுடை மானிப்பாயைச் சேர்ந்த செல்வன் வேலாயுதம் பாலசங்கரின் விசேட அடையாள அட்டை (இல.0905021897), தேசிய அடையாள அட்டை (இல. 751273592V) என்பன மானிப்பாய்க்கும் கட்டுடைச்சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கட்டுடைச் சந்தியில் உள்ள நிமல் தொலைத் தொடர்பகத்தில் ஒப்படைக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம். (89210)

இல.579/2, கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம் எனும் முகவரியை உடைய, 0901001162 எனும் இலக்கமுடைய விசேட அடையாள அட்டை கடந்த 16.6.2001இல் மானிப்பாயை அண்டிய பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும முகவரியில் ஒப்படைத்து உதவவும். அல்லது 2284 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (89215)

### பொய்யாமொழி .ஜோதிடம்

கல்வி, விவாகம், புத்திரர், தொழில், வெளிநாட்டுப் பிரயாணம் போன்றவற்றில் தடைகள் நீங்க ஆலோசனை வழங்கப்படும். பலன் தவறினால் பணம் திரும்பப்பெறலாம். சனி, செவ்வாய் நல்லூர் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயிலடியிலும் ஞாயிறு மல்லாகம் பழம் பிள்ளையார் கோயில் மடத்திலும் சந்திக்கலாம். (89211)

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர், சேவல், கல்பேட்ஸ் இறைச்சிக்கோழி மொத்தமாகவும், சில்லறையாகவும் தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். சுத்தம செய்தல் இலவசம். 31,மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம், (கண்ணா வீடியோ சென்ரர் வளவு) (89191)

**Broilers, Cullbirds, Cockerls soup** இறைச்சிக் கோழிகள் சுத்தம்செய்து (பாதிக் கோழி உட்பட) தினமும் காலை 6.30 - மாலை 6.00 வரை பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:-தனபாலசிங்கம், 19,முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தியடி, நல்லூர். (89199)

### O/L கணிதம்

புதிய பழைய பாடத்திட்டத்தில் **Distinction, Credit** பெறுபேறடைய ஆண்டு 6-10 வரையும் ஆரம்பத்திலிருந்து (**Paper Class** வரை) கற்பிக்கப்படும். அனுபவமுள்ள ஆசிரியர், 85, சிவன் கோயிலடி (சிவன் கோயில் பின்புறம்), திருநெலவேலி. (89050)

### DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக்கட்டுரைகள், பல்கலைக்கழக நடைமுறைகளுக்கு அமையக் கட்டிக் கொடுக்கப்படும். (இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் ரூ 350/-) தொடர்பு:- பாரதி, 430, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல.3081 (C/16990)

### இலகு திருமண சேவை

1972 மிருகசீரிடம் **B.sc.** ஆசிரியைக்கு உள்ளூரிலும், 1964 ரோகிணி செவ்வாய் 7, **USA Engineer** இற்கும் மணமகன்கள் தேவை. உள்ளூர், வெளியூர் சகல மணமக்கள்களுக்கும தொடர்பு: ஞாயிறுகளில் துரைவிமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (89202)

### விற்பனைக்கு

கொழும்பில் இருந்து பொருள்கள வந்த வெற்றுக் 'காட்போட்' பெட்டிகள (பெரிய அளவுகளில்) விற்பனைக்குண்டு. தொடர்பு:-39, 3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (89207)

புத்தம் புதிய **LUMALA CYCLE,** (பெரியது) விற்பனைக்குண்டு. தொடர்பு:- வே.சண்முகலிங்கம், சேச் லேன், திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (89208)

நல்ல நிலையிலுள்ள **YAMAHA MATE 90 (V90)** உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: உதயன் மெக்கானிக், ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். (89219)

### ஆங்கிலக்கல்வி

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக்கப் பயில, இலக்கணம், கடிதம் எழுத மற்றும் கடித மூலம் பயிற்சி, ஆசிரியர்: ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426(302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். நாகலிங்கசுவாமிகள் வீதி, சங்கானை. (89196)

### வீடு விற்பனைக்கு

24,குமாரசாமி வீதியிலுள்ள 33/4 பரப்புக் காணியுடன் கூடிய வீடு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி தி.கனகலிங்கம். காலை 9 மணி தொடக்கம் மாலை 5மணிவரை. (89198)

## களனிப் பல்கலைக்கழக நூலக எரிப்பு முயற்சி முறியடிப்பு

களனிப் பல்கலைக்கழகத்தின் நூலகத்தை எரிக்க எடுக்கப்பட்ட முயற்சியைப் பொலீஸார் முறியடித்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இனந்தெரியாத குழு ஒன்று நூலகத்தில் இருந்த புத்தகங்களுக்கு மண்ணெண்ணெயை ஊற்றி விட்டு மெழுகுதிரி மூலம் அவற்றை எரிக்க முயற்சி மேற்கொண்டதாகவும் -

அங்கு காவலில் இருந்த பொலீஸார் எடுத்த முயற்சியினால் நூலகம் பாதுகாக்கப்பட்டது என்றும் - களனிப் பொலீஸார் தெரிவித்தனர்.

பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற கைகலப்பு ஒன்றை அடுத்து கடந்த வெள்ளி முதல் இருதினங்கள் பல்கலைக்கழகம் மூடப்பட்டிருந்த நேரமே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தால் நூலகத்தில வைக்கப்பட்டிருந்த இரண்டு அல்லது மூன்று புத்தகங்களே எரிந்து நாசமாகியுள்ளதாகப் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

(க-3)

**மூளாய் ஐயனார் கோயில் கட்டட நிதிக்காக**

**மாபெரும் மாட்டுவண்டில் சவாரிப் போட்டி**

*காலம்* :- 24-06-2001 ஞாயிற்றுக்கிழமை
*இடம்* :- மூளாய்ப் பிள்ளையார் கோயில் பின் குளத்தடி

திரு.ந.திரிலோகநாதன்
*(தலைவர், வலிகாமம் பிரதேச சபை)*
அவர்களின் தலைமையில் போட்டி நடைபெறும்.

- மூளாய் விவசாயிகள்.

(89217)

பல்கலைக்கழக, பாடசாலை மாணவர்களுக்கும் அலுவலக அலுவலர்களுக்கும் ஒரு நற்செய்தி!
உங்களுக்குத் தேவையான சகல TYPING வேலைகளும் கம்பியூட்டர் மூலம்
DISSERTATION TYPING, TYPE SETTING, கடிதங்கள், ஆவணங்கள், TRANSLATION, BINDING
மேலும்

* TELEPHONE * FAX
* E-MAIL
* COMPUTER * PRINTERS
* UPS



* INTERNET * PHOTOSTAT
* LAMINATING
* COMPUTER ACCESSORIES
* SCANNERS


இன்னும் சகல விதமான தபால் சேவைகளும் காப்புறுதிக் கூட்டுத்தாபன சேவைகளையும் மற்றும் பல இன்னோரன்ன சேவைகளையும் அமைதியான சூழலில்.......
குறைந்த செலவில்..........ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்:

**SRI MURUGAN**

**Computer systems, Communication Services & AGENCY POST OFFICE**
T.P: 021-2670, 021-3588 FAX: 021-3214 e.mail: del-smskr@eureka.lk.
303, K.K.S. ROAD, JAFFNA.
(C/17150)

# ஓராண்டு நினைவலைகள்

"இறைவா என்னைக் காத்தருளும் உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்தேன்" *(தி.பா.16:1)*



*பூவுலகு விடைகொடுக்க, பொன்னுலகை அடைந்து புகழ்*
*மேலுலகில் மேன்மை பெற்று மேலான பதமடைந்தீர்!*
*நீங்காத நினைவுகளால் நீர்மல்கும் விழிகளுடன்*
*தாங்காத மனைவி, மக்கள், உற்றார் உலகோர்*
*ஏங்காத நாளில்லை ஏன் மறைந்தீர் எம்மைவிட்டு?*
*தீங்கான நோயகற்றும் தெவிட்டாத சேவையினால்*
*ஆண்டாண்டு போனாலும் ஆர்மறப்பார் அரிய தொண்டை!*
*மாண்டாருள் மாணிக்கமே! மகிமையெல்லாம் சேர்த்துவைத்து*
*தாண்டாத மணி விளக்காய் துயர்களெல்லாம் துடைத்தவரே!*
*இறையின்பம் என்றென்றும் உன்னிடத்தில் நித்தியமாம்*
*குறையின்றி வாழ்வதற்காய் கோயிலெல்லாம் கும்பிடுவோம்.*

இவரது ஆன்ம இளைப்பாற்றுத் திருப்பலி சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் 22-06-2001 வெள்ளிக்கிழமை முற் பகல் 11.00 மணிக்கு இடம்பெறும். இதில் கலந்து இவரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். திருப்பலி முடிவடைந்த பின் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் பங்குபற்றிச் செல்லுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை.)

**அமரர்**
**வைத்திய கலாநிதி க.ஜோர்ஜ்**
(D.A.M, R.I.M.P,J.P)

அன்னைமடியில் 1930-04-06
ஆண்டவரடியில் 2000-06-22

*Dr.சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.*

*இவரின் பிரிவாற்றாமையால் வாடும்:*
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(89214)

## சாரதி தெரிவு நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜூன்20

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கான சாரதிகளைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை இன்றும் நாளையும் கோண்டாவில் டிப்போவில் நடைபெறும் என்று வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஆளணி முகாமையாளர் அறிவித்துள்ளார். (ம-117)

# தியாகிகள் தினம் நேற்று அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்20

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் அமரர் க.பத்மநாபாவின் 11ஆவது நினைவு தினம் நேற்று யாழ்.நகரிலுள்ள கட்சியின் (வரதர் அணி) அலுவலகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

நினைவு தினத்தை ஒட்டி யாழ். போதனா வைத்தியசாலையில் கட்சியின் யாழ்.பிராந்திய அமைப்பாளர் த.சுபத்திரன் தலைமையில் கட்சி உறுப்பினர்கள் இரத்ததானம் வழங்கினர்.

உயிர் நீத்த தோழர்களின் பெற்றோர்கள் கட்சி அலுவலகத்தில் வைதது கௌரவிக்கப்பட்டனர். யாழ்ப்பாணத்திலுள்ள 15க்கு மேற்பட்ட நலன்புரி நிலையங்களுக்கு மதிய உணவு மற்றும் பாடசாலை உபகரணங்களும் வழங்கப்பட்டன. (ஐ-5-139)


தோலகட்டி நெல்லிரசம்

யாழ்.மக்களே! இதோ மகிழ்ச்சி தரும் செய்தி ஒன்று!

தோலகட்டி நெல்லிரசம்

சுவையோ சுவை இதற்கு நிகர் இதுவே!

ஒரு முறை பருகியவர் மறுமுறை மறுப்பதும் இல்லை; மறப்பதும் இல்லை!

போலிகளை வாங்கி ஏமாறவேண்டாம்.

ஒரிஜினல் லேபலுடன் புதிய சிவப்பு மூடியில் THOLAGATTY PRODUCTS என உள்ளதா என்று பார்த்து வாங்குங்கள்.

அருள் ஆச்சிரமம்,
5, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
T.P:- 3351

- அதிபர். (89219)


## நயினைக் குருமணியை நலம் பெற வாழ்த்திடுவோம்



### சிவஸ்ரீ ச.மகேஸ்வரக்குருக்கள்

நாகம் பூசித்த நயினை அம்மன் ஆலயத்தில்
வேதாகம மந்திரத்தில் விருப்புடனே பூசை செய்து
மேதாவியாய் உலக இந்துமத பீடத்தின்
அதிபதியாய் ஒருமனதாய்த் தேர்வு பெற்று
கோடானு கோடி புகழ் கொண்டுவரும் குருமணியை
நீடாயுள் செல்வமுடன் நிலைபெற்று வாழ்கவென
வாயாரப் புகழ்ந்து மனமார வாழ்த்திடுவோம்!

நயினைத் தாயின் நற்றவப்புதல்வன் மணிபல்லவத்தீவின் வேத சிவாகம மந்திரச் செம்மல் சிவஸ்ரீ சம்புகேஸ்வரக்குருக்கள் மகேஸ்வரக் குருக்கள் அவர்கள் சிவாச்சார்யப் பெருமக்கள் அவையினரால் உலக இந்துமத பீடாதிபதியாக ஒருமனதாய்த் தெரிவு செய்யப்பட்டமையை மனதாரப் பாராட்டுவதுடன் குருமணிகள் நீடாயுள் செல்வமுடன் நிலைபெற்று வாழ நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பிகையின் பாதக்கமலங்களைப் பணிகின்றோம்.

நயினை மக்கள் சார்பில்,
ஸ்ரீ கணேச சனசமூக நிலையம்,
நயினாதீவு - 6.

-தலைவர். (C/17154)

## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியின் சிரேஷ்ட ஆசிரியை

திருமதி சாந்தினி நாகராஜா அவர்களின் அன்புத் தந்தையார்

### கணபதிப்பிள்ளை வைத்திலிங்கம்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கந்தரோடை,
சுன்னாகம்.
(89221)

அதிபர்,
ஆசிரியர் கழகம்,
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

## நன்றி நவில்கின்றோம்

எங்கள் குடும்பத் தலைவி திருமதி திரேசம்மா பாக்கியநாதர் அவர்களின் மறைவு குறித்து ஆறுதல் அளித்த அன்பு நெஞ்சங்களுக்கும், மேன்மை தங்கிய யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களுக்கும், குரு முதல்வர் அருட் தந்தை செல்வராசா அடிகளாருக்கும் அடைக்கலநாயகி ஆலயப் பங்குத் தந்தை பயஸ் அடிகளாருக்கும், நெடுந்தீவு பங்குத் தந்தை மொண்லேட் அடிகளாருக்கும் மற்றும் அருட் தந்தையர்க்கும் அருட் சகோதரிகளுக்கும் திரு வழிபாடு நடத்திய கன்னியர்களுக்கும், யாழ் அடைக்கலநாயகி ஆலய பங்குச் சபையினருக்கும், ஆறுதல் கூறியும், அருள் உரை ஆற்றியும் திருப்பலி ஒப்புக் கொடுத்தும் இறுதிப் பயணத்தை நிறைவு செய்த அருட்தந்தை ஜெயசேகரம் அடிகளாருக்கும், அதில் கலந்துகொண்ட அன்பு நெஞ்சங்கள் அனைவருக்கும் எம் இதயத்தின் ஆழத்தில் இருந்து நன்றி நவில்கின்றோம்.

36, 5ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
(89231)

- குடும்பத்தினர்.

## தபாலகங்கள் பழைய இடத்தில்

தென்மராட்சி,ஜூன்20

வடமராட்சிப் பகுதியில் தற்போது இயங்கும் கொடிகாமம் அஞ்சல் அலுவலகம் மற்றும் அதனுடன் இணைந்த மிருசுவில், விடத்தற் பளை, கச்சாய், மந்துவில் ஆகிய உப அஞ்சல் அலுவலகங்கள் ஆகியவை எதிர்வரும் 25ஆம் திகதி தொடக்கம் முன்னர் இயங்கிய சொந்த இடங்களில் இயங்கவுள்ளன.

இந்த அஞ்சல் அலுவலகங்களை சொந்த இடங்களில் செயற்பட வைக்குமாறு யாழ்.பிரதி அஞ்சல் மா அதிபர் கடிதம் மூலம் அறிவித்துள்ளார். (ஐ-117)

## நுணாவில் வரை பஸ் சேவை

தென்மராட்சி,ஜூன்.20

பருத்தித்துறை டிப்போவினால் சரசாலைவரை நடத்தப்பட்டுவந்த பஸ்சேவை கடந்த திங்கள் தொடக்கம் நுணாவில் சந்திவரை நீடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மட்டுவில், நுணாவில் ஆகிய பகுதிகளில் உள்ள தமது வீடுகளைப் பார்வையிடச் செல்லும் மக்களின் பதிவுகள் நுணாவில் சந்தியில் மேற்கொள்ளப்படுவதால் பஸ்சேவை நுணாவில்வரை நீடிக்கப்பட்டுள்ளதாக டிப்போ வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-117)


ஆசிரியர் தேவை

தமிழ், ஆங்கிலம் தரம் 6-11 வரை கற்பிப்பதற்கு ஆசிரியர் தேவை.
செவ்வாய், வெள்ளி
மாலை 4–5 மணி வரையும்,
புதன், வியாழன் மாலை 5–6 மணி
வரை சந்திக்கலாம்.
தொடர்பு:- சி.சிவசக்தி B.A.(Cey)
640, மானிப்பாய் வீதி,
ஓட்டுமடம்
யாழ்ப்பாணம். (89216)

தேவை

யாழ்.நகரில் இயங்கும் கொமினிகேஷன் ஒன்றுக்கு பெண்பிள்ளை ஒருவர் உடனடியாகத் தேவை. (89209)
தொடர்புகளுக்கு:-
விள.இல.1307
மே/பா.உதயன்.

லஷ்சுமி இணுவில்.
இன்று முதல்
விஜயகாந்த்,லைலா, நாசர் நடிப்பில்
கள்ளழகர்.
(ரீல்ஸ்)
S.T.R.பிலிம்ஸ் புதிய வெளியீடு.
தினசரி காட்சிகள் : 10.30, 2.30 (ப.நே.)
சனி, ஞாயிறுகளில் :10.30, 2.30, 5.00
(89230)

நாகம்ஸ்
சுன்னாகம்
இன்று முதல்
விஜயகாந்த், மீனா நடித்த
சேதுபதி IPS
(ரீல்ஸ்)
தினசரி: 11.00, 2.30 (புதிய நேரம்) (89224)

குதூகல ஆரம்பம்! S.T.R Films இன் மாபெரும் வெளியீடு!
ராஜா - யாழ்ப்பாணம்





9வேடங்களில் ரசிகர்களைக் கலக்கும் அஜித்,
வசுந்துராதாஸ், நக்மா, மீனா
மற்றும் பலர் நடிப்பில் திரையிலே காவியமாகும்
CITIZEN சிட்டிசன்
தினசரி 10.30, 2.00, 5.00 (புதிய நேரம்) (C/17000)

"T.R.R.O"
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
மருதனார்மடம்.
(இராமநாதன் கல்லூரிக்கு முன்பாக)
☆☆ கணனி அச்சு
☆☆ ரோணியோ வேலைகள்
செய்துகொடுக்கப்படும். (C/17160)


## கண்ணீர் அஞ்சலி

எமது சக நண்பர்கள்

ஜெயராஜா - ஜனார்த்தனன்
ஜெயராஜா - யதுநந்தனன்
ஜெயராஜா - ஜெயநந்தனன்.
ஆகியோரின் தாயாரான

### திருமதி நாகேஸ்வரி ஜெயராஜா

அவர்களின் மறைவையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ஆனைப்பந்தி. (89227) - சக நண்பர்கள்.

# மரண அறிவித்தல்கள்

## தம்பு சந்திரசேகரம்

(விநாயகர் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)

தலங்காவற் பிள்ளையார் கோயிலடி, திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தம்பு சந்திரசேகரம் அவர்கள் நேற்று (19.06.2001) செவ்வாய்க்கிழமை அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாராயணபிள்ளை தம்பு - பூரணம் அவர்களின் அன்பு மகனும் செல்வராணியின் அன்புக்கணவரும் கஜன் (யா/செங்குந்தா இந்துக்கல்லூரி), காயத்திரி (யா/இந்து மகளிர் கல்லூரி), சுயன் (யா/ஸ்ரான்லிக் கல்லூரி), சுரேன், மதன் (யா/திருநெல்வேலி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இந்திராதேவி (கொழும்பு), ஞானசேகரம் (பிரான்ஸ்), குணசேகரம் (ஜேர்மனி), இராஜசேகரம் (சுவிஸ்), மனோகரன், சிவனேசன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற மு.கந்தையா (தேநீர்க் கடை - சாவகச்சேரி) - மகேஸ்வரி அவர்களின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல இன்று (20.06.2001) புதன்கிழமை தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு பி.ப. 3.00 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தலங்காவற் பிள்ளையார் கோயிலடி,
திருநெல்வேலி கிழக்கு. (89228)

தகவல்:
மனைவி

## பொன் சபாபதி

(ஓய்வுபெற்ற கல்விப்பணிப்பாளர், கிளிநொச்சி)

நுணாவில் மட்டுவிலைப் பிறப்பிடமாகவும், ஏழாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன் சபாபதி நேற்று (2001.06.19) கிளிநொச்சியில் காலமாகிவிட்டார்.

அன்னார் லீலாவதியின் அன்புக் கணவரும், நாவேந்தன்(இந்தியா), வேல்மாறன்(களஞ்சியப் பொறுப்பாளர், உணவுக் கட்டுப்பாட்டுக் கிளை மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்பு அறிவிக்கப்படும்.

துளசி,
ஏழாலை மேற்கு, ஏழாலை. (89229)

தகவல்:
வேல்மாறன்
(மகன்)

## திருமதி சிவமுத்து சபாரட்ணம்

திருநெல்வேலியை வசிப்பிடமாகக்கொண்ட திருமதி சிவமுத்து சபாரட்ணம் 19.06.2001 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற S.K சபாரட்ணத்தின் (சட்டம்பி - ஓய்வுபெற்ற பிரதம கணக்காளர், மலேசியா) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், கந்தையா, சிவக்கொழுந்து, பவளம், அன்னமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரியும், சண்முகநாதன் (U.S.A - இளைப்பாறிய சிறுவர் நன்னடத்தைப் பாடசாலை, அச்சுவேலி), பரமேஸ்வரி, மகேஸ்வரி (குஞ்சு) ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வநலலம்மா (செல்வா - ஓய்வுபெற்ற ஆசிரியை), காலஞ்சென்ற சதாசிவம் (ஓய்வு பெற்ற தபாலதிபர்), சிவலிங்கம் (ஓய்வுபெற்ற லிகிதர், யாழ்.செயலகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரகாஷ் (U.K), மீரா ஆனல்ட் (U.K), உமாதேவி சுரேஸ், சுகந்தி, சுமதி, சியாமா, ராஜ்குமார் (U.K), மாயா ஆனந்தன் (U.K) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சுகன்யா, சதுர்ராமன், சதுர்ணாதேவி, சதுர்த்தினி, ரஜிந்தா, சஜிந்தா, கிருஷ்ணி ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21-06-2001) வியாழக்கிழமை மாலை 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

ஆடியபாதம் வீதி,
பழங்கிணற்றடிப் பிள்ளையார் ஒழுங்கை,
திருநெல்வேலி. (C/17161)

தகவல்:
திருமதி சதாசிவம்
பரமேஸ்வரி (மகள்)

## புலிகளைப் பேச்சுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எல்லாச் சமூகத்தவர்களுக்கும் அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கும் இனப்பிரச்சினையே முட்டுக் கட்டையாக உள்ளது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண பிரதான கட்சிகளிடையே உடன்பாடு ஏற்பட வேண்டும்.

1931ஆம் ஆண்டு முதல் 48 ஆம் ஆண்டுவரை அமுலில் இருந்த டொனமூர் அரசமைப்பின் கீழ் நாட்டில் அமைதி நிலவியது. பிரச்சினைகள் ஏதும் எழவில்லை. இன்றுள்ள நிலையில் அந்த அரசமைப்பு விடயத்தில் கவனம் செலுத்தவேண்டும்.

கடந்த 35 வருடங்களாக அரசியல் மயமாக்கப்பட்டுள்ள இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண ஆட்சிக்கு வந்த அரசுகள் தவறிவிட்டன. இந்த விடயத்தைத் தீர்க்க அரசுகள் கவனம் செலுத்தவில்லை. அதற்குக் காரணம் கட்சிகளுக்கு இடையில் நிலவிய ஒற்றுமையின்மையே ஆகும்.

எமது அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்க வேண்டும். அது காலத்தின் தேவையாகும். அப்போதுதான் பிரச்சினைகளுக்கு தீர்வைக் காணமுடியும்.

இதற்கு தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதே ஒரே வழி ஆனால் முதலில் பிரதான கட்சிகள் அரசியல் இணக்கம் ஒன்றுக்கு வர வேண்டும்.

இன்றுள்ள நிலை தொடராமல் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட உடன்பாடு காணப்பட வேண்டும். அதன்பின்பே விடுதலைப் புலிகளுடன் பேச முடியும் - என்றார் அவர். (ஐ-3-9)

## திருநெல்வேலிப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோப்பாய் பொலீஸாரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கபபட்டது.

நேற்றைய சூட்டுச் சம்பவம் இடம்பெற்ற பகுதியில் கடந்த சுமார் ஒரு மாத காலத்துக்கு முன்பு படையினர் நடத்திய தாக்குதலில் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் எனச் சந்தேகிக்கப்படும் இளைஞர் ஒருவர் உயிரிழந்தது தெரிந்ததே. (ஐ-6-7-10-86-139-173)

## கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வான்பரப்பு நோக்கி விரைந்து அங்கு தேடுதல் நடத்தின. எனினும் தடயங்கள் ஏதும் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

அந்த மர்ம விமானம் எத்தனை அடி உயரத்தில் பறந்தது, எத்திசை நோக்கிச் சென்றது என்பன தொடர்பாக உடனடியாகத் தகவல்கள் எதனையும் பெறமுடியவில்லை என விமானப்படைப் பேச்சாளர் லிங் கொமாண்டர் அஜித் விஜேசுந்தர தெரிவித்தார்.

இது போல் முன்னரும் மூன்று தடவைகள் விமான நிலைய 'ராடர்' திரையில் நாட்டின் வான் பரப்பினுள் அத்துமீறி ஊடுருவிய விமானங்கள் குறித்த சமிக்ஞைகள் தென்பட்டுள் என. எனினும் அவை குறித்தும் இதுவரை எதுவித தகவல்களும் கிடைக்கவில்லை.

சிலவேளைகளில் 'ராடரில்' ஏற்படும் தொழில்நுட்ப மாற்றங்களின் போதும் இவ்வாறான சமிக்ஞைகள் ஏற்பட வாய்ப்புகளுள்ளன என்றும் லிங் கொமாண்டர் அஜித் விஜேயசுந்தர தெரிவித்தார். (ஐ-3)

## பிரிட்டிஷ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்புதூவில் பிரிட்டிஷ் நிதி உதவியுடன் பூர்த்தியாக்கப்பட்ட தண்ணீர் விநியோகத் திட்டத்தை இன்று பிற்பகல் அவர் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைப்பார். (அ)

## தமது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்திருக்கிறார்.

புலிகளுக்கு மிகவும் நெருக்கமான - அவர்களுக்காக வேவு பார்க்கின்ற - உளவாளிகளின் பட்டியல் ஒன்றை அமெரிக்காவின் உளவுச்சஞ்சிகை ஒன்று வெளியிட்டிருப்பதாகவும் - அந்தப் பட்டியலில் பத்திரிகையாளரான சிவராம், ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினரான டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா மற்றும் பி.பி.ஸி. சிங்கள சேவையின் முன்னாள் பொறுப்பாளர் வசந்தராஜா ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருப்பதாகவும்-

இதனையடுத்து இவர்களது நடவடிக்கைகள் தொடர்பாகப் பாதுகாப்புப்பிரிவினர் உஷாரடைந்துள்ளதாகவும் -அரசசார்பு லேக்கவுஸ் பத்திரிகை ஒன்றில் முன் பக்கத்தில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

தனது சுதந்திரமான பத்திரிகைத் துறைப் பணிக்கு எதிராக வேண்டுமெனறே விடுக்கப்பட்டிருக்கும் இந்தக் குற்றச்சாட்டுக் காரணமாகத் தனனுடையதும் தன்னுடைய மனைவி, பிள்ளைகளினதும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக சிவராம் பி.பி.ஸி. செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார். அண்மையில் இனந்தெரியாத நபர்கள் இருவர் இரண்டு பெரிய பொதிகளுடன் தனது இல்லத்துக்குள் அத்துமீறி நுழைய முயன்றதாகவும், அயலவர்களின் எதிர்ப்பை அடுத்துப் பின்னர் அவர்கள் தப்பி ஓடி விட்டதாகவும் சிவராம் தெரிவித்துள்ளார்.(ஐ)

## படையினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் - மக்கள் சிறிய குடும்பங்களை விரும்பியதாலேயே பத்தாயிரம் மேலதிக இராணுவத்தினரையும், இரண்டாயிரம் பௌத்த பிக்குகளையும் சேர்க்கும் திட்டம் தோல்வி அடைந்தது - என்று பிரதமர் கூறினார்.

இதேவேளை, இரண்டுக்கும் அதிகமான பிள்ளைகளைக் கொண்ட குடும்பஙகளுக்கு விசேட ஊக்குவிப்புப் பணம் வழங்க அரசு திட்டமிட்டு வருவதாக அரச சார்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பிரதமரின் மேற்படி செய்தி குறித்து விமர்சித்த பி.பி.ஸி. செய்தியாளர் பிரான்ஸிஸ் ஹரிசன், சர்ச்சைக்குரிய, முரண்பட்ட கருத்துக்களையும் வெளியிடுவதில் ரத்னசிறி விக்கிரமநாயக்க பிரபல்யம் பெற்றவர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமரின் உரை எதனை மறை பொருளாகச் சுட்டி நிற்கிறது என்று கூறமுடியவில்லை; ஆனால் அவரது கூற்று செயலுருப் பெறமாட்டாது என்றே நம்புகிறோம் என்று இலங்கைக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டச் சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.


BRIGHTMAN
கல்வி நிலையம்
பிறவுண் வீதி - யாழ்நகர்
A/L 2003
பொருளியல்
சந்தைப் பொருளாதாரம்
BY:- சண் (B.Com)
(தனி ஒரு பாட அனுமதி வழங்கப்படும்)
ஆரம்பம்:- 23/06/2001
Sat - 11.00 a.m (89206)

சக்தி கல்வி நிலையம்
புகையிரத வீதி,
சுன்னாகம்.
பிரத்தியேக வகுப்பு
கணக்கீடு
ஆசிரியர்:- B. முகுந்தன் B.B.A. (Hons)
2003 A/L
தனிவியாபார முடிவுக்கணக்கு
ஆரம்பம் - 22.06.2001
நேரம் - 3.30மணி (89222)

2003 A/L
இணைந்த கணிதம்
G. ஐங்கரன் (B.Sc.)
APP. - வேக நேர வளையி
PURE. - திரிகோணகணிதம் (C/17155)
ஆரம்பம்:-21-06-2001
வியாழன் 6.00 a.m.
THIGAL
இணுவில்.

எமது ஒரிஜினல் ஐங்கரன் வீடியோ CD வெளியீடுகள்
★ டும் டும் டும்
★ லிட்டில் ஜான்
★ ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி
வீடியோ விமல்
யாழ்ப்பாணம். (C/17162)

PC REPAIR & UPGRADE
உங்களது Computer
Working Slow
Display Problem
Getting Stuck
Multimedia Problem
Software Installation
?
எவ்வகையான பிரச்சினைகளும் தீர்க்கப்படும்.....! (C/17158)
உங்கள் கம்பியூட்டரில் எந்தப் பிரச்சினையென்றாலும் உடனடியாக எங்களை நாடுங்கள்
விசேட விலையில் பெற்றுக்கொள்ளலாம்
MIPAQ PENTIUM III 733 MHZ
- Gigabyte Main Board
- 64 MB Ram
- 20.4 GB HDD
- 8 MB AGP
- 14" Monitor
- ATX Power
- PS/2 Keyboard & Mouse
- 52X CD-Rom
- 32 Bit Sound Card, Speakers
- 56 K Modem
Rs 59,500.00 upwards
MICRO PC SYSTEMS
No. 15, 36th Lane, Wellawatte, Colombo - 06.
Telephone : 074 - 513235, 074 - 516764
Branches
No. 82, New Chetty Street, Kotahena, Colombo - 13, Telphone : 074 - 619673, Web : www.mipaq.com
No. 09, Modern Market, Hospital Road, Jaffna. Telphone : 021-2067

பருத்தி நகரின் மையத்தில்
OXFORD
ENGLISH ACADEMY
(புதிய கிளை நிறுவனம்)
பத்திரகாளி அம்மன் கோயில் வீதி, பருத்தித்துறை.
பின்வரும் வகுப்புகள்
ஆரம்பம்:- 25.06.2001
★ வேலை செய்வோருக்கான Spoken English and Written English மாலை சனி, ஞாயிறு வகுப்புகள.
★ 2003ஆம் ஆண்டு A/L பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான GENERAL ENGLISH காலை, மாலை நேர வகுப்புகள்.
★ புதிய A/L ஆங்கில மொழி மூலமான கல்வியைத் தொடரும் வகையில் 10, 11ஆம் ஆண்டு மாணவர்களுக்கான Spoken and Written English வகுப்புகள்.
★ இவ்வருடம் O/L பரீட்சையில் ஆங்கிலத்துக்கு தோற்றும் மாணவர்களுக்கான (பழைய பாடத்திட்டம்) பயிற்சி வகுப்புகள்.
BY: MR.B.JOTHY
(அனுமதிகளையும் நேர அட்டவணையையும் அலுவலகத்தில் முற்கூட்டியே பெறவும்) (88945)

தரமான கணனிகள் மலிவான விலையில்
Intel நிறுவனத்தின் Latest வெளியீடான அதிநவீன கணனிகள்
பாடசாலைகளில் கணனியா?
அலுவலகங்களில் கணனியா?
கவலையை விடுங்கள்! உங்கள் வீட்டிலும் கணனி.
Intel நிறுவனத்தின் Latest வெளியீடான அதிநவீன கணனிகள்
1000 MHz (1 Ghz) Processor.
40 GB Harddisk
SD Ram 128MB
VGA Card 8MB
SamSung 14" Color Monitor
Floppy drive 3.5/1.44 MB
Keyboard -108-win98
Mouse (Genius)
ATX Casing
Mouse pad
CD Rom 52x Acer
Sound card 32/64Bit
3D Multi Media Box
Freeoooo
Filter glass
Dust cover
Copy Holder
10 Floppy Disks
Any Soft Ware Installation
இன்னும் பல

மற்றும் ஏனைய உபகரணங்கள்
UPS , Epson LQ-300 Printer, Scanner [Genius], Mother Board, Ram, Ribbon, Cartridge, Ink Jet Refill, Hard Disk, SubWoofer, Floppy Disk இன்னும் பல
தொடர்புகளுக்கு IBMS IT MARKET
NO:701,K.K.S.Road, Jaffna.
T.P:3165

உங்களின் கணனித் தேவைகளுக்கு எங்களின் சேவைகள்


வீடியோ படப்பிடிப்பாளர்களுக்கு ஏற்ற வகையில்
Video Capturing, Video Editing, Video Titling
மேற்கொள்ளக் கூடிய வசதிகள் நிறைந்த கணனிகளும் விற்பனைக்குண்டு
கணனிகளைக் கொள்வனவு செய்யும் எமது வாடிக்கையாளர்கள் ஒவ்வொருவருக்கும் எமது நிறுவனத்தில் வாடிக்கையாளர் சார்பாக 2நபர்களுக்கு முற்றிலும் இலவசமாக கணனிப் பயிற்சி நெறி ஒன்றினை மேற்கொள்ள வசதிகள் செய்து தரப்படும்
தரமான கணனிகளையும் கணனி உதிரிப்பாகங்களையும் நியாயமான விலையிலும் உத்தரவாதத்துடனும் நீங்கள் பெற்றுக்கொள்ளக் கூடிய ஒரே ஒரு நிறுவனம்
IIS SALES UNIT
100, Clock Tower Road, Jaffna. (C/17159)
T.P. No : 2831
E-Mail : iis@sltnet.lk

ஆரம்பம்.
JAVA
JAVA புதிய பிரிவு எதிர்வரும் சனிக்கிழமை (23.06.2001) பி.ப 2.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.
புதிதாக இணைய விரும்பும் மாணவர்கள் தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும். (C/17156)
Director (Ad)
IBMS
No.701 K.K.S Road Jaffna.


## மரண அறிவித்தல்

### திருமதி மனோன்மணி மார்க்கண்டு

வட்டுக்கோட்டை துணவியைப் பிறப்பிடமாகவும் சுதுமலையை வாழ்விடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி மார்க்கண்டு நேற்று (19.06.2001) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டு (முன்னாள் தலைவர், மானிப்பாய் ப.நோ.கூ.சங்கம், சமாதான நீதிவான்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா, கமலாம்பிகை, விசுவலிங்கம், பாலசிங்கம், தளையசிங்கம், நேசமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் மங்களராஜன் (கட்டட ஒப்பந்தகாரர், மன்னார்), மங்களேஸ்வரி, மங்களகுமாரி ஆகியோரின் பாசமிகு தாயாரும் மனோறஞ்சன், அருந்ததி ஆகியோரின் அன்பு மாமியாரும் கேசிகா, யாதவன், இமையவன், சிறிகணேஸ், சிறிபற்மநாதன், சிறிவரதன், சிறிதர்சினி, சிறிரஞ்சினி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.06.2001) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை,
மானிப்பாய்.
(C/17163)

தகவல்:
தா.மனோறஞ்சன
(மருமகன்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.06.2001 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.